Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 53
செவ்வாய்க்கிழமை 18 ஜனவரி 2022
தை 05 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16
விலை: 30/=

**கொரோனா**
நேற்று 688
மொத்தம் 597,035

**உயிரிழப்பு**
நேற்று 07
மொத்தம் 15,218



# ஜனாதிபதியுடன் பேச்சுக்குத் தயார்!

### கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அறிவிப்பு

கொழும்பு, ஜனவரி 18

"ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசுடன் நேரில் பேச்சு நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்நேரமும் தயார் நிலையில் உள்ளது. ஆனால், அத்தகைய பேச்சு, நிரந்தர அரசியல் தீர்வுக்கு வழிசமைக்கும் வகையில் அமையவேண்டும். பேச்சு என்ற பெயரில் காலத்தை வீணடிக்க விரும்பவில்லை " - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

15

# கொரோனா அதிகரிப்பு!

### விசேட மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 18

நாட்டில் நாளாந்தம் இனங்காணப்படும் கொரோனாத்தொற்றாளர்களின் எண்ணிக்கையில் கணிசமானளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக விசேட மருத்துவ நிபுணர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

15

# வரலாறுகள் ஒருபோதும் பிழையாக வழி நடத்தா!

### சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு



கிளிநொச்சி, ஜன. 18

வரலாறுகள் ஒருபோதும் பிழையாக வழி நடத்துவது இல்லைதான் விரும்பிய திசையில் சரியாகத்தான் பயணித்துக் கொண்டிருக்கின்றது. பல கனவுகளோடு வாழ்ந்தவர்கள், இன்றும் ஆத்மாக்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் கனவுகள் என்றோ ஒருநாள் நனவாகும் - என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

15

### மின்சார சபை பொறியியலாளர்கள்

# இன்று போராட்டம்!

கொழும்பு, ஜன. 18

புதிய பொது முகாமையாளருக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என்று இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் அறிவித்துள்ளனர். (த-இ)




### கடற்றொழிலுக்குச்சென்று காணாமற்போன

# தந்தையும் மகனும் சடலங்களாக மீட்பு!

மட்டக்களப்பு, ஜன. 18

மட்டக்களப்பு - வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காயங்கேணி கடலில் மீன்பிடிக்கச் சென்ற தந்தையும் மகனும் நேற்றுச் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். இருவரும் நேற்றுமுன்தினம்

15

### ஊர்காவற்றுறையில் -

# விபத்தில் ஒருவர் சாவு!

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில், ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் காயங்களுடன் சிகிச்சை பெற்றுவருகின்றார் என்று

15

### கஞ்சா கடத்தலின் சூத்திரதாரி

# மாதகல் மதன் இந்தியாவில் கைது

கொழும்பு, ஜன. 18

இந்தியாவிலிருந்து கடல்மார்க்கமாக யாழ்ப்பாணத்துக்கு போதைப்பொருள் கடத்தும் வலையமைப்பின் முக்கிய சூத்திரதாரி என்று குற்றஞ்சாட்டப்படும் ஒருவர் இந்தியா

15

# அரிசி விலை குறையுமாம்

கொழும்பு, ஜன. 18

அடுத்தவாரம் தொடக்கம் அரிசியின் விலை குறைவடையுமென்று எதிர்பார்க்கின்றோமென, அகில இலங்கை சிறிய மற்றும்

15

# ஆனந்தசங்கரிக்கு கொரோனா!



யாழ்ப்பாணம், ஜன. 18

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கொரோனாத் தொற்றுக்குள்ளாகி, யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரு

15

# முல்லையில் எறிகணை மீட்பு



கொழும்பு, ஜன. 18

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு - சுதந்திரபுரம் காட்டுப்பகுதிக்குள் வெடிக்காத நிலையில் வெடிபொருள்கள் சில நேற்று மீட்கப்பட்டுள்ளன.

போரின்போது பயன்படுத்தப்பட்ட விடுதலைப்புலிகளின் தயாரிப்பான த[illegible]

15

தாதியர் தேவை
(Vacancy for Nurses)
யாழ்நகரிலுள்ள
பல் வைத்திய நிலையத்துக்கு
- 25 வயதுக்கு உட்பட்ட பெண்கள்
- பயிற்சிக்கு உட்பட்டவர்கள் முன்அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- தங்குமிட வசதியுண்டு.
(cs 42326) (2.6)
077 758 8729
internationaldentalcare@gmail.com

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2022
21 22 23
ஜனவரி January
10.00am - 8.00pm
முற்றவெளி மைதானம்
இன்னும் 3 நாட்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா எச்சரிக்கை: இராஜதந்திரப் பேச்சு

கொழும்பு, ஜன. 18

கனேடிய அரசு விடுத்துள்ள பயண எச்சரிக்கை தொடர்பில் இராஜதந்திர அடிப்படையில் பேசப்படும் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஓய்வுநிலை அட்மிரல் ஜயனாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொருளாதார ஸ்திரமற்ற நிலை நிலவி வருவதால் கனடா தனது நாட்டுப் பிரஜைகளுக்குப் பயண எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பிலேயே இராஜதந்திர செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இலங்கைக்கான கனேடியத் தூதுவரிடம் இது தொடர்பில் பேசப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4,இ)



## இனவாதிகளை நம்பி ஏமாறாதீர்

### *சஜித் அறிவுரை*

கொழும்பு, ஜன. 18

ஐக்கிய மக்கள் சக்தி அரசின் ஊடாக நாட்டில் இன, மத, பேதம் முற்றாக இல்லாதொழிக்கப்படும். இனவாதிகளுக்கும், மதவாதிகளுக்கும் இனி அஞ்சப் போவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நுவரெலியா மாநகரசபை மைதானத்தில் இடம்பெற்ற தைப்பொங்கல் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தோட்டத் தொழிலாளர்கள் வியர்வை சிந்தி, கடுமையாக உழைத்து அந்நியச் செலாவணியைக் கொண்டு வரப் பாடுபட்ட போதும், அவர்களுக்கு இந்த நாட்டில் பிரஜாவுரிமை இருக்கவில்லை. ஆனால் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ தோட்டத் தொழிலாளர்களுக்கு குடியுரிமையை வழங்கி, அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்கால கொள்கை விஞ்ஞாபனத்தில் இதனை இணைத்து, தோட்டத் தொழிலாளர்களின் அபிவிருத்திக்காக ஜனாதிபதி செயலணி ஒன்றை ஸ்தாபிப்பேன்.

தயவுசெய்து விழித்துக்கொள்ளுங்கள். மதவாதம், பிரிவினைவாதத்துக்கு மீண்டும் ஏமாறவேண்டாம். எமது தாய் நாட்டைக்கட்டிஎழுப்ப அனைவரும் கைகோர்த்து செயற்படுவது அவசியம். இயற்கை குளிர்காற்று வழங்கினாலும், மக்களின் வயிற்றில் நெருப்பு எரிகின்றது. இன்று தரித்திரம் தலை தூக்கியுள்ளது.

எதிர்க்கட்சிக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் சிறந்த உறவு உள்ளது. அந்த உறவை வலுப்படுத்தித் தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதாரம், வீடமைப்பு, கலாசாரம் என்பவற்றைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம் - என்றார். (ஒ-4,இ)




## கல்வியியலாளர் சேவைகள் வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஜன. 18

அதிபர், ஆசிரியர் ஆலோசகர் சேவை மற்றும் ஆசிரியர் சேவை ஆகியவற்றை தனித்தனி சேவைகளாகப் பிரகடனப்படுத்தி, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தல், தமது போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. இதனடிப்படையில் சேவையில் உள்ளவர்களின் தரத்துக்கு ஏற்ப அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-4,இ)

## நான்கு கிலோமீற்றர் வீதியே இரு வருடங்களில் சீரமைப்பு

### கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 18

தற்போதைய அரசாங்கம் கடந்த 2 வருடங்களாக மத்திய அதிவேக வீதியின் வெறும் 4 கிலோமீற்றரை புனரமைப்பு செய்துவிட்டு முழுமையாகத் தாமே புனரமைத்தோம் என்று மார்தட்டுகின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். மத்திய அதிவேக வீதியின் மீரிகமவிலிருந்து குருநாகல் வரையான 41 கிலோ மீற்றரில் 37 கிலோமீற்றர் தூரத்துக்கான பணிகள் நல்லாட்சி அரசாங்கத்தால் நிறைவு செய்யப்பட்டன. 52 நாள்கள் சதி நடக்கும் போதே, நல்லாட்சி அரசாங்கம் 37 கிலோமீற்றர் தூரத்துக்கான பணிகளை நிறைவு செய்திருந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாலால் நாயை ஆட்டுவிக்க முடியாது சு.கவை சீண்டும் பெரமுன எம்.பி.!

கொழும்பு, ஜன.18

நாய் வாலை ஆட்டினாலும், வாலால் நாயை ஆட்டுவிக்கமுடியாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூண்டோடு வெளியேறினாலும் அரசுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான சனத் நிஷாந்த நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசிலிருந்து கூண்டோடு வெளியேறினாலும் அரசு பக்கம் 140 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பார்கள். அதனால் சுதந்திரக் கட்சியின் வெளியேற்றம் அரசுக்கு பாதிப்பாக அமையாது.

நாய் வாலை ஆட்டினாலும், வாலால் நாயை ஆட்டுவிக்க முடியாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

அதேவேளை, அரசிலிருந்து வெளியேறுவது தொடர்பில் சில்லறைத்தனமான அரசியல்வாதிகள் தமக்கு ஆலோசனை வழங்க வேண்டியதில்லை என சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## சு.கட்சி தனிவழியில் செல்ல மத்திய குழு பச்சைக்கொடி!

அடுத்து வரும் எந்தத் தேர்தலாக இருந்தாலும் தனித்துப் போட்டியிடுவதற்கு கட்சியின் மத்திய செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

நாட்டில் இன்று பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. தேங்காயொன்றின் விலை 100 ரூபா. 5 ஆயிரம் ரூபாவை அச்சிட்டு வழங்குவதால் பெரிதாக எதுவும் நடக்கப்போவதில்லை. குறிப்பிட்டளவு அரச ஊழியர்களே இருக்கின்றனர். சாதாரண மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவில்லை. அவர்கள் என்ன செய்வார்கள்?

நாட்டில் ஆறரை லட்சம்பேர் இரவு உணவை உட்கொள்ளாது நித்திரைக்குச் செல்கின்றனர் என நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். குழந்தைகளுக்கும் போஷாக்கு கிடைப்பதில்லை. என்ன செய்வதென சுதந்திரக்கட்சியிடம் பலரும் கேட்கின்றனர். நாம் தெளிவானதொரு முடிவை எடுத்துள்ளோம்.

அடுத்து நடைபெறும் எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் சுதந்திரக்கட்சி தலைமையில் கூட்டணி அமைத்து போட்டியிடுவதற்கு கட்சியின் மத்திய செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது- என்றார். (எ-44)

## அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் தீர்மானம் எடுக்கமாட்டோம்

கொழும்பு, ஜன. 18

தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அரசியல் ரீதியிலான தீர்மானங்களை முன்னெடுக்க மாட்டோம். என்று சுற்றாடல்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற கட்சிக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:-

சுதந்திரக் கட்சி அரசியல் ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ளது என்று ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடுவதை ஏற்று கொள்ளமுடியாது. சுதந்திரக் கட்சி அரசியல் வரலாற்றில் பல்வேறு சவால்களை எதிர் கொண்டு ஆட்சியதிகாரத்தை கைப்பற்றியுள்ளது என்பதை அரச தலைவர்கள் நன்கு அறிவார்கள்.

அரசாங்கத்துக்கும், சுதந்திரக் கட்சிக்கும் இடையில் தற்போது ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளை அடிப்படையாகக்கொண்டு அரசியல் களத்தில் பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன. அரசாங்கம் நெருக்கடிக்குள்ளானால் அதன் விளைவு நாட்டு மக்கள் மீது தாக்கம் செலுத்தும். ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவது சுதந்திரக் கட்சியின் பிரதான நோக்கமாக உள்ளது. அதற்கான நடவடிக்கையை முன்னெடுத்து வருகிறோம் - என்றார். (ம)




நவீன வங்கியியல் வசதிகளுடன் பண வைப்பு மற்றும் பண மீளப்பெறல் இயந்திரங்களுடன் தொழிற்படும், இலங்கை வங்கியின் பூநகரி கிளையானது சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய இன்று சுபவேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

**சிறந்த சேவையைப் பெற்றுக்கொள்ள எமது கிளைக்கு வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்!**

வாடியடி, பூநகரி.

தொலைபேசி: 021 206 0820 மின்னஞ்சல்: boc345@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் பங்காளிகள் இறங்கக்கூடாது!

### பிரதமர் மஹிந்த கோரிக்கை



**கொழும்பு, ஜன.18**

**ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசின் கரங்களாகப் பங்காளிக் கட்சிகள் உள்ளன. இந்தக் கட்சிகளின் தலைவர்களும் - உறுப்பினர்களும் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அரசைக் கவிழ்க்கும் முயற்சிகளில் இவர்கள் எவரும் ஈடுபடக்கூடாது.**

இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச. தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசுக்குள் இருப்பவர்களுக்குக் கருத்துச் சுதந்திரம் இருக்கின்றது. அதற்காக அவர்கள் உண் [illegible] பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

அரசுக்குள் இருக்கும் ஒருசிலர் வெளியிடும் விமர்சனங்களை வைத்துக்கொண்டு அரசுக்குள் பெரும் பிளவு என்று ஊடகங்கள் செய்திகளை வெளியிடுகின்றன. ஊடகங்களும் உண்மைகளை அறிந்துபொறுப்புணர்வுடன்செய்திகளை வெளியிடவேண்டும்.

ஊடகங்களில் வரும் செய்திகளை வைத்துக்கொண்டு எதிரணியினரும் தத்தமது அரசியல் பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர். அரசை வீட்டுக்கு விரட்டியடிப்போம் என்று கூளுரைக்கும் சஜித் அணியினர், கடந்த ஆட்சியில் என்ன செய்தார்கள்? நல்லாட்சி என்ற பெயரில் நாட்டை அவர்கள் நாசமாக்கியதை மக்கள் மறக்கமாட்டார்கள். அதற்கான பதிலடிகளைக் கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் மக்கள் வழங்கியுள்ளனர். எமது அரசு சீரான பாதையில் பயணிக்கின்றது. மக்கள் நலன்கருதி, இந்த வருடம் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம் - என்றார். (எ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்தினாலுக்கு சேறு பூசாமல் குற்றவாளிகளைப் பிடியுங்கள்

## சரத் பொன்சேகா அறிவுரை

**கொழும்பு, ஜன.18**
**கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மீது சேறு பூசக்கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;
உயிர்த்த ஞாயிறுத் தற்கொலைத் தாக்குதல் தொடர்பிலான சர்ச்சை நாடு முழுவதிலும் ஏற்பட்டது. அந்த சர்ச்சையின் உதவியுடன் இந்த அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது. ஆயினும் அந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை. இந்தச் சம்பவத்தால் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாக தற்பொழுது சிறு கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டாலும் மக்கள் பீதியடைகின்றனர். இந்தப் பின்னணியை தற்போதைய அரசாங்கமே உருவாக்கியது. அரசாங்கத்தால் மக்களுக்கு பாதுகாப்பை வழங்கமுடியாது என்ற நிலைப்பாடு மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது. கர்தினால் உள்ளிட்ட அனைவரும் சிறிய விடயமொன்று தொடர்பிலும் பதற்றமடைகின்றனர். கர்தினாலின் குற்றச்சாட்டுக்களுக்குச் சிலர் பதிலளிப்பதை நாம் அவதானிக்கின்றோம். ஏட்டிக்கு போட்டியான பதில்களையே நாம் பார்க்கின்றோம். குற்றச் செயலில் ஈடுபட்டவர்களைக் கண்டு பிடிப்பதைவிடவும் கர்தினாலுக்கு சேறு பூசுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது -என்றார். (எ-இ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 24 . 11 . 1946

விண்ணுலகில் 18 . 01 . 2021



## திருமதி சதானந்தன் நவநீதம்

அமைதியின் உருவமாகவும்
அடக்கத்தின் இருப்பிடமாகவும்
பண்பின் பெருந்தன்மையாகவும்
பாசத்தின் உறைவிடமாகவும்
எம் மத்தியில் அன்பு ஒளியாக
இருந்த உத்தமியே
என்றும் உங்கள் இனிய
நினைவுகளுடன்..........

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.**

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs 42313) (2.6)

# சிறுமியுடன் குடும்பம் நடத்தியவர் முல்லைத்தீவுப் பொலிஸால் கைது

முல்லைத்தீவு, ஜன. 18
முல்லைத்தீவு, மாங்குளம் பகுதியில் 13 வயதுச் சிறுமியுடன் குடும்பம் நடத்திய திருகோணமலை இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் சிறுமியிடமும் மருத்துவப் பரிசோதனைகள் இடம்பெற்றுவருகின்றன.
சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:
மாங்குளம் பகுதியில் உள்ள ரயர்க் கடை ஒன்றில் வேலை செய்வதற்காக திருகோணமலை இளைஞர் ஒருவர் வந்துள்ளார். அவர், மாங்குளம் புதிய கொலனிப் பகுதியில் வீடொன்றை வாடகைக்கு எடுத்து வசித்து வந்தார். அவருடன் திருகோணமலை மூதூர் பகுதியைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமியும் வசித்து வந்துள்ளார். சிறுமியின் விருப்பத்தின் பேரில் இருவரும் குடும்பமாக இருந்தனர் என்று பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.
கடந்த 15ஆம் திகதி கைது செய்யப்பட்ட இளைஞர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சிறுமி மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ம-19)

# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

வவுனியா, ஜன.18
வவுனியா உதைபந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும் வவுனியா கொறவப்பொத்தான வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.
நிர்வாகத் தெரிவில் தலைவராக எ.நாகராஜன், செயலாளராக எஸ்.சௌமியன், பொருளாளராக எம்.லரீப் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.
மேலும் உபதலைவர்களாக எம்.ஹமீம், ஐ.பரமநாதன், எஸ்.நந்தகேசன், பி.புலேந்திரன் ஆகியோரும், நிர்வாக உபசெயலாளராக எம்.சுகந்தன், உபசெயலாளர் (சுற்றுப்போட்டி) எம். இஸ்லாம், உபபொருளாளராக ஜி.பிரசாந் ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக ஐந்து பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ச-110)

## வல்வெட்டித்துறையில்

# பொலிஸாரின் தாக்குதலால் இருவர் மருத்துவமனையில்

வல்வெட்டித்துறையில் பொலிஸார் முன்னெடுத்த காட்டுமிராண்டித்தனமாக தாக்குதலில் காயமடைந்த இருவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரணவாய் வடக்கு, கொற்றாவத்தை பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: மேற்படி பகுதியில் சகோதரர்களுக்கு இடையில் முரண்பாடு ஒன்று ஏற்பட்டுள்ளது.
இதையடுத்து சகோதரர்களில் ஒருவர் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கியுள்ளார். இதையடுத்தே அன்றைய தினம் இரவு, குறித்த முறைப்பாட்டின் எதிராளிகள் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
இதில் குலசேகரம் மிதுலன் (வயது-24), அப்புக்குட்டி வசந்தன் (வயது-40) ஆகிய இருவருமே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-113)

# போதிய உரங்களில்லை எரிநோயால் பயிரழிவு

மன்னார், ஜன.18
மன்னார் மாவட்டத்தில் பெரும்போகத்தில் செய்கை பண்ணப்பட்டுள்ள நெற்பயிர்கள் இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினிகள் இல்லாமையால், எரிநோயின் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளன.
விதைப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு 45 நாள்களுக்குள் உரிய உரம் மற்றும் கிருமிநாசினிகள் பயிர்களுக்கு இடவேண்டும்.
தற்போது இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினிகள் இல்லாமையால், பெரும்போகப் பயிர்கள் எரிநோயால் தாக்கப்பட்டுள்ளன. இதனால் இந்த வருடம் உரிய விளைச்சலைப் பெறமுடியவில்லை என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-4-213)

# ஹெரோய்னுடன் இளைஞன் கைது

வவுனியா, ஜன.18
ஹெரோய்னுடன் இளைஞர் ஒருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.
கொழும்பில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த பேருந்து, நவகமுவ பகுதியில் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டபோது, குறித்த இளைஞனிடம் 5 கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4-110)

# கஞ்சாவுடன் கைதான இளைஞனுக்கு பிணை

25 மில்லிகிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். சிறப்பு அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் உடுப்புக்குளம், முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டார்.
முல்லைத்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட இளைஞர், பதில் நீதிவான் வாசஸ்தலத்தில் முற்படுத்தப்பட்டார்.
அவரைப் பிணையில் விடுவித்த நீதிவான், அடுத்த வழக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதிக்குத் தவணையிட்டார். (ஒ-4-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குத்துவெட்டுக்கள் உச்சம்: தேரர்களிடம் ஓடுகிறது சு.க.

கொழும்பு, ஜன.18

**கடுமையான அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசியும், ஆலோசனையும் பெறுவதற்கு திட்ட மிட்டுள்ளனர்.**

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவினர் விரைவில் கண்டி சென்று, மகாநாயக்க தேரர்களை சந்திப்பார்களெனக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரச கூட்டணியில் அங்கம் வகித்தாலும், அரசின் செயற்பாடுகளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கடுமையாக விமர்சித்துவருகின்றது. அதனால் மொட்டுக் கட்சிக்கும், சுதந்திரக்கட்சியினருக்கும் இடையில் கடும் சொற்போர் மூண்டுள்ளது.

அரசுக்குள் இருந்துகொண்டு, சலுகைகளை அனுபவித்தபடி விமர்சிப்பதைவிட, கௌரவமாக வெளியேறுங்கள் என சுதந்திரக்கட்சியினருக்கு மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் பதிலடி கொடுத்து வருகின்றனர். இந்த நிலையில் புதியதொரு கூட்டணியை கட்டியெழுப்புவதில் சுதந்திரக்கட்சியினர் தீவிரம் காட்டிவருகின்றனர். அதே நேரம் அரசிலிருந்து வெளியேறுவது தொடர்பில் சுதந்திரக் கட்சிக்குள்ளும் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன.

இவ்வாறான பின்னணியில் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து, ஆலோசனை பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும் விரைவில் முடிவொன்றை எடுக்கவுள்ளார். அதற்காகவே அமைச்சரவை மறுசீரமைப்பைக்கூட அவர் பிற்போட்டுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

(எ-44)

## ஜப்பானிடம் இருந்து வருகிறது நிதியுதவி

கொழும்பு, ஜன. 18

கடனில் மூழ்கியுள்ள இலங்கை அரசாங்கம் ஜப்பானிடம் இருந்து நிதி உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சை ஆரம்பித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் வகையில் 3.5 பில்லியன் டொலர் நிதியைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கடனை டொலராக மாற்றுவதற்கான சரியான அளவு இன்னும் இறுதி செய்யப்படாத நிலையில் பேச்சின் முடிவைப் பொறுத்து தீர்மானம் எட்டப்படும் என மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். ஜப்பானில் இருந்து பெறப்படும் கடன் ஜப்பானிய ஜென்னில் வழங்கப்படும் என்பதோடு 0.05 சதவீத வட்டியையும் கொண்டிருக்கும் என முதற் கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ம-இ)

## திருமண வீட்டில் நடந்த சோகம்

கொழும்பு.ஜன.18

திருமண நிகழ்வொன்றில் ஏற்பட்ட முரண்பாடு, கொலையில் முடிந்துள் ளது. இந்தச் சம்பவம் திஸ்ஸ மஹாரம, விரஹெலப் பிரதேசத்தில் நடந்துள்ளது.குடும்பப் பிரச்சினை காரணமாக, நபர் ஒருவர் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

படவிகம, லுனுகம்வெஹெரப் பிரதேசத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் அந்தப் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4-இ)

## வடக்குக்கான ரயில் தடம் 6 மாதங்களுக்குப் பூட்டு!

கொழும்பு, ஜன.18

அநுராதபுரத்தில் இருந்து வவுனியா வரையான வடக்கு ரயில் த்டம் அபிவிருத்திப் பணிகளுக்காக 6 மாதங்களுக்கு மூடப்படும் என ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

92 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 120 கிலோமீற்றர் ரயில் தடம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. தற்போது இந்த ரயில் தடத்தில் ரயில்கள் ஒரு மணிநேரத்துக்கு சுமார் 80 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கின்றன. மஹவ தொடக்கம் ஓமந்தை வரையிலான பகுதியை அபிவிருத்தி செய்வதன் பின்னர் ரயில்கள் ஒரு மணிநேரத்துக்கு சுமார் 100 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## தேர்தல் பரப்புரைப் பாடலாக மெனிக்கே மஹே ஹித்தே

கொழும்பு,ஜன.18

இலங்கைப் பாடகி யொஹானி டி சில்வா பாடிய "மெனிக்கே மஹே ஹித்தே" பாடல், இந்திய மத்திய ஆளும் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின், உத்தரப் பிரதேச மாநில தேர்தலில் பரப்புரைப் பாடலாக மாற்றப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேச மாநில தேர்தலில் இந்தியப் பிரதமர் மோடி மற்றும் மாநில முதலமைச்சர் யோகி ஆதித்திய நாத் ஆகியோருக்கு வாக்களிக்கும் விதத்தில், பாடல் வரிகள் எழுதப்பட்டுள்ளன. சிங்களப் பாடலின் மெட்டில் அமைந்துள்ள இந்தப் பாடலுக்கு மக்கள் மத்தியில் மிகப்பெரிய ஆதரவு கிடைத்துள்ளது. (ஒ-4-இ)

## சீனாவிலிருந்து அரிசி நன்கொடை

கொழும்பு, ஜன. 18

இலங்கைக்கு விரைவில் சீனாவில் இருந்து அரிசி, நன்கொடை யாகக் கிடைக்கும் என வர்த்தக அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். 1952ஆம் ஆண்டு இலங்கை - சீன இறப்பர், அரிசி ஒப்பந்தத்தின் 70ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த நன்கொடை வழங்கப்படவுள்ளது. (ம)




எங்கட அரசியல்வாதியளை ஒரு மேசையில இருத்தி, ஒற்றுமையா ஒரு முடிவெடுக்கிறதெண்டால் அது கடவுளுக்குக்கூட கஷ்டமான விசயம்தான். ஏதோ ஒருமாதிரி இழுபறிப்பட்டு, இந்தியப் பிரதமருக்கு ஒரு ஆவணம் அனுப்ப எல்லாரும் ( முன்னணிக்காரர், முஸ்லிம் கட்சியள்,மனோ கணேசன்ர கூட்டணி இல்லாமல்) கையெழுத்து வைச்சிருக்கினம். ஆனால் இவையின்ர காலமோ என்னவோ இந்தியத்தூதுவர் திடீரெண்டு இந்தியாவுக்கு போனதால , முதல் குடுக்க நினைச்ச திகதியில அந்தக் கடிதத்தைக் குடுக்க ஏலாமல் போச்சுது. இப்ப தூதர் வந்திட்டார் எண்டதால குடுக்கப் போயினம்.

ஆனால் இந்த ஆவணத்தைக் குடுக்கிறதில எங்கட தமிழரசுச் சட்டாம்பிக்கு பெரிசா மனமில்லை. ஏதேனும் சொல்லி இந்த ஆவணத்தைக் குடுக்கவிடாமல் குழப்பிறதிலையே முதலில இருந்து குறியாய் இருக்கிறாராம். முதல்ல இந்த ஆவணம் தயாரிக்கிற கூட்டத்துக்கு தமிழரசுக் கட்சி போகாமல் விட்டதுக்கும் சட்டாம்பியார்தான் காரணம். பிறகு சம்பந்தரும், மாவையரும் 'போகத்தான் வேணும்' எண்டு முடிவெடுத்ததால, சட்டாம்பியாரால ஒண்டும் செய்ய ஏலாமல் போட்டுது. ஆனாலும் ஆள் குழப்பிற முயற்சியைக் கைவிடேலை. மாவையர் அந்த ஆவணத்திலை கையெழுத்து வைக்கமுதல் 'மலையகத் தமிழர் பற்றி இருக்கிற விசயங்கள் இதில எதுக்கு? அதை நிப்பாட்டுவம்' எண்டு சட்டாம்பியார் ஒரு அட்வைஸ் குடுத்திருக்கிறார்.

ஆனால், "தமிழ் அரசுக் கட்சியை தந்தை செல்வநாயகம் தொடங்கினதே அரசாங்கம் மலையக மக்களின்ர பிராஜவுரிமையைப் பிடுங்கினதாலதான். அதோட எங்கட எல்லாப் பேச்சுவார்த்தையளிலையும், திம்புவில கூட, மலையக மக்களின்ர பிரச்சினையளுக்கும் தீர்வு வேணும் எண்டுதான் கேக்கிறம். அதால மலையக மக்கள் தொடர்பான விசயங்களை நிப்பாட்ட ஏலாது" எண்டு ரெலோ செல்வம் உடனேயே மறுத்தான் அடிச்சார்.

ஆனாலும் சட்டாம்பி விடேலை. அதை நிப்பாட்டத்தான் வேணும் எண்டுறமாதிரி சொல்லிக்கொண்டே போக, சாதுவா இருந்த தமிழரசுக் கட்சித்தலைவர் மாவைக்கு வந்திச்சே கோபம்.

"இரும் பேசாமல். உமக்கு எங்கட கட்சியின்ரயும், இனத்தின்ரையும் பழைய வரலாறுகள் தெரியாட்டி பேசாமல் இரும். மலையக மக்களின்ர விசயத்தைப் போடாமல் ஆவணத்தை அனுப்பஏலாது" எண்டு கொந்தளிக்கத் தொடங்கிட்டார். மாவையர் இப்பிடிப் பாயுறதால சம்பந்தர் தனக்கு சப்போர்ட் பண்ணுவார் எண்டு அவரைச் சட்டாம்பி பாக்க, அவரும் "மலையக மக்களின்ர விடயம் அதில நீக்கப்படக்கூடாது. அது இருக்கட்டும்" எண்டு ஒரே போடாப் போட, சட்டாம் பியின்ர முகத்தைப் பார்க்க வேணுமே. ஆளுக்கு என்ன செய்யிறதெண்டு தெரியாமல் தலையைக் குனிஞ்சபடி இருந்திட்டார். அதுக்குப் பிறகுதான் மாவையர் சைன் வைச்சவர். அதுக்குப் பிறகும் வேற வேற வழியளில இந்த ஆவணத்தைக் குடுக்க விடாமல் செய்ய சட்டாம்பி மறைமுகமாக முயற்சி செய்திருக்கிறார். ஆனால் அதுகள் ஒண்டுமே பலிக்கேலையாம்.

அவர் என்னதான் குழப்பினாலும், ஆவணத்தைக் குடுத்தே தீருறது எண்டதில ரெலோக்காரரும் விடாப்பிடியா நிக்கினம். ஏழு கட்சித்தலைவர்மாரும் சைன் வைச்ச ஒரிஜினல் ஆவணம் ரெலோத்தலைவர் செல்வம் எம்.பியிட்டத்தான் இருக்கு. அதால 'ஆர் வந்தாலென்ன, விட்டாலென்ன நான் கொண்டு போய் குடுப்பன்' எண்டு செல்வம் சொல்லிப்போட்டா ராம். உந்த ஆவணத்தைக் குடுக்கிறதுக்கிடையில இன்னும்என்னென்ன குழப்பங்கள் வரப்போகுதோ?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கம்பன் கலைக்கூடத்துக்கு

# கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி. இணைந்து அடிக்கல் நடுகை

**கிளிநொச்சி, ஜன.18**
**கிளிநொச்சி, ஜெயந்திநகரில், அகில இலங்கை கம்பன் கழகத்தின் கலைக்கூடத்துக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது.**



இந்த நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் செயலரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் மற்றும் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா, வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோருடன் யாழ்ப்பாணம் மாநகர மேயர் வி.மணிவண்ணனும் இணைந்து அடிக்கல் நடுகை செய்தனர்.
நிகழ்வில் தலைமையுரையாற்றிய கம்பவாரிதி இ.ஜெயராஜ், தற்போதைய காலகட்டத்தில் தமிழ் இளைஞர்கள் கல்வியில் சிறந்து விளங்கினாலும், ஆளுமையற்றுள்ளனர். சிங்கள இளைஞர்களே ஆளுமையாக உள்ளனர். அந்த நிலையை மாற்றவே கம்பன் கலைக்கூடம் நிறுவப்படுகின்றது. தமிழ் இளைஞர்களை நல்ல தலைவர்களாக்க இந்த கலைக்கூடம் உதவும் -என்றார். (ஒ-4-113)

# முகாமையாளருக்கு சேவைப் பாராட்டு



யாழ்ப்பாணம். ஜன.18
பனை அபிவிருத்திச் சபையில் விரிவாக்க முகாமையாளராகக் கடமையாற்றிய கா. கோபாலகிருஷ்ணன் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.
இதனை முன்னிட்டு, தென்னை, கித்துல் மற்றும் பனைச் செய்கை மேம்பாடு மற்றும் அது சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவால் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
35 வருடங்களுக்கு மேலாக பனை சார் சமூக அமைப்புக்களுடன் இணைந்து சேவையாற்றிய இவர், பனை அபிவிருத்திச்சபை, பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சமாசம் ஆகியவற்றுடன் நல்லுறவைப் பேணி பனைசார்துறையை வலுப்பெற தனது அனுபவ வாயிலாக உழைத்தவர் என்று துறைசார்ந்தவர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (ஒ-47)



## படகுப் பொங்கல்

யாழ்ப்பாணம், ஜன.18
கொடிகாமம் அபான்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன், கச்சாய் கடற்றொழிலாளர் சங்கம் மற்றும் கச்சாய் கலைமகள் விளையாட்டுக் கழகம் ஆகியவை இணைந்து நடத்திய படகுப் பொங்கல் கச்சாயில் இடம்பெற்றது.
கச்சாய் கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் அ.பார்த்தீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், படகுப் போட்டி, படகு வலித்தல் சாக்கோட்டப் போட்டி, தேங்காய் துருவுதல், பலூனைப் பாதுகாத்தல், பலூன் உடைத்தல் , முட்டியுடைத்தல், தேங்காய் உரித்தல், வாயால் தேங்காய் உரித்தல், வாணவேடிக்கை, கிடுகு பின்னுதல், ஊசி நூல் கோர்த்தல், நீரோட்டம் போன்ற பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம்பெற்றன. நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டார். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஒ-4-159)

## தைப்பூச உற்சவங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 18
நீர்வேலி கந்தசுவாமி கோயில் தைப்பூச உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 8 மணிக்கு சிறப்புப் பூசை மற்றும் அபிஷேகத்துடன் இடம்பெறவுள்ளது.
அத்துடன், பிற்பகல் 5 மணிக்கு விஷேட பூசை நடைபெற்று கற்பூர தீபாலங்காரத்தோடு முருகப்பெருமான் திருமஞ்சத்தில் ஆரோகணித்து வீதி வலம் வருதலும் இடம்பெறும். (ஒ-ரி1)

* * *

யாழ்ப்பாணம், ஜன. 18
கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில், தைப்பூசத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 7 மணிக்கு சிறப்பு பூசைகளுடன் அபிஷேகம் மற்றும் வழிபாடுகள் நடைபெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-ரி1-17)

* * *

யாழ்ப்பாணம், ஜன.18
சங்கானை குளத்தடி வீதி சரி பேச்சியம்மாள் ஆலயத்தில் தைப்பூச உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.
அம்பாளுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் விசேட பூசைகள் இடம்பெற்று, அம்பாள் வீதி உலா இடம்பெறும். (ஒ-4-63)

* * *

வவுனியா, ஜன.18
வவுனியா- ஸ்ரீநகர் அம்மன் ஆலயத்தில் தைப்பூச விசேட வழிபாடுகள் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.
ஆலய பிரதம குரு தலைமையில் இடம்பெறும் வழிபாடுகளில், சுகாதார முறைப்படி பக்தர்களைப் பங்குபற்றுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (ஒ-4-110)

## சாதனையாளர் கௌரவிப்பு

கொடிகாமம், ஜன.18
யாழ்ப்பாணம், கச்சாய் மகா வித்தியாலயத்தின் 2020ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தர சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாணக் கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சிவத்திரை சிவநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.
சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லலிதா லிங்கேஸ்வரனும் கௌரவ விருந்தினர்களாக பழைய மாணவரும் தொழில்நுட்பக் கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளருமான க. சோதிநாதன் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர் சி.துரைசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-159)

## மஹா கும்பாபிஷேகமும் அலங்கார வளைவு திறப்பும்

யாழ்ப்பாணம், ஜன.18
நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் ஆலய மஹாகும்பாபிஷேகமும், பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகமும் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும்.
நாளை புதன்கிழமை காலை 5.30 மணிக்கு கர்மாரம்பமும், எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு எண்ணெய்க்காப்பும் இடம்பெறும்.
தொடர்ந்து 48 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும்.
அதேவேளை நாளை புதன்கிழமை காலை 6.45 மணிக்கு ஆலய மேற்குப்புற வாசல் அலங்கார வளைவு திறப்பு விழா, கலாசார மண்டப புகு விழாவும், நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு பஞ்சதள[illegible] விழாவும் இடம்பெறும். (ஒ-4-இ)

## மரபுவழிப் பண்பாடாக நெற்புதிர் அறுவடை




யாழ்ப்பாணம், ஜன.18
மரபுவழி பண்பாடாகக் கொண்டாடப்படும் நெற்புதிர் அறுடை விழா நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் நேற்று இடம்பெற்றது.
[illegible] தினத்துக்கு [illegible] நாள் கடைப்பிடிக்கப்படும் இந்தப் பண்பாட்டு விழாவில், கோவில் அறங்காவலரும், சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்ய ஆலயத்துக்குச் சொந்தமான மட்டுவிலுள்ள வயலுக்குச் சென்றனர். அந்த வயலில் அறுவடை செய்யும் நெல்லில் அமுது தயாரித்து, கந்தனுக்கு படையல் செய்து பூசைகள் இடம்பெற்றன. தொடர்ந்து பக்தர்களுக்கும் அமுது வழங்கப்பட்டது. 288 ஆவது ஆண்டாக இந்த விழா கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பழையவர்கள் புதிய முகங்களோடு!

ராஜபக்சக்களின் ஆட்சி நாள்தோறும் ஆட்டம் கண்டு வருகின்றது. ஆனால் அதைப் பெயர்த்து வீழ்த்தும் அளவுக்கு எதிரணி பலமாக இல்லை. இந்தப் பலவீனத்தால்தான் ராஜபக்சக்கள் தொடர்ந்தும் கோலோச்சுகின்றார்கள். எதிரணியும் பத்தும் பலதுமாக சிதறுண்டுள்ளது. அவர்கள் ஓரிணையும் வாய்ப்புக்களும் இல்லை.

இவ்வாறானதொரு நிலையில்தான் முன்னாள் ஜனாதிபதியும், பண்டார நாயக்கா பரம்பரையின் அரசியல்வாரிசுமான சந்திரிகா அம்மையார் தலைமையில் புதிய அரசியல் கூட்டணி உதயமாகவுள்ள தகவல் வெளியாகியுள்ளது. தென்னிலங்கையில் ஆட்சி மாற்றத்தை இலக்காகக்கொண்டு, ராஜபக்சக்களின் ஆட்சியில் அதிருப்தியடைந்துள்ள, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி. ஆகியவற்றைச் சாராத தரப்புக்களே சந்திரிகாவின் பின்னால் அணி திரண்டுள்ளன.

2015ஆம் ஆண்டு ராஜபக்சக்களின் ஆட்சிக்கு அப்போதைக்கு முடிவுரை எழுதுவதில் காத்திரமான பங்கு வகித்தவர் சந்திரிகா அம்மையார். அவருடன் இணைந்து காய்களை நகர்த்தியவர் அண்மையில் உயிரிழந்த மங்கள சமரவீர. இப்போது மீண்டும் ஓர் ஆட்சிமாற்றத்துக்கான எத்தனத்துக்கு சந்திரிகா களமிறக்கப்பட்டுள்ளார். எதிர்காலத்தில் எதிரணிகளை ஓரணியாக்கி ராஜபக்சக்களுக்கு எதிரான தென்னிலங்கையின் போக்கை வசமாக்கும் நடவடிக்கைகளை அவர் எடுப்பார் என எதிர்பார்க்கலாம்.

இதன் ஓர் அங்கமாக தமிழ் மக்களின் வாக்குத்திரட்சியை உறுதிப்படுத்துவதற்காக, சந்திரிகா தலைமையிலான அணியினர் வடக்கு – கிழக்கு நோக்கியும் வரக்கூடும். ராஜபக்சக்களுக்கு எதிரான தமிழ் மக்களின் மனநிலையை தங்களுக்குச் சாதகமாக்கவும் கூடும். ஆனால் இதன் ஊடாக தமிழ் மக்களுக்கு கிடைக்கப்போவது என்ன?


சந்திரிகா அம்மையாரும் நிறைவேற்று அதிகாரக் கதிரையில் இருந்தவர்தான். ஆட்சியில் இருக்கும்போது வராத ஞானோதயம், அதன் பின்னர்தான் அவருக்கும் உதித்தது. ராஜபக்சக்கள் அணியில் உள்ளவர்களைப்போன்று இந்த அணியில் இருப்பவர்களும், இருக்கப்போகின்றவர்களும் கடைந்தெடுத்த இனவாதிகள் கிடையாதுதான். ஆனால், தமிழ் மக்களுக்கு என்ன விடிவு என்பதுதான் இங்கு கேள்வி.

2015ஆம் ஆண்டு ராஜபக்சக்களை ஆட்சியிலிருந்து அகற்ற உதவியதன் ஊடாக தமிழர் தரப்பு சாதித்தது என்ன? காணி விடுவிப்பு என்று சப்பைக்கட்டைக் கூறக்கூடும். ஆனால் நிரந்தரமான எந்தவொரு நன்மையும் தமிழர் தரப்புக்குக் கிடைக்கவில்லையே.

வெறுமனே தென்னிலங்கையின் ஆட்சி மாற்றத்துக்காக தமிழர்கள் கருவிகளாக – கறிவேப்பிலைகளாகத்தான் – பயன்படுத்தப்படுகின்றார்கள். அதையும் தாண்டி, தமிழர்களுக்கு தீர்வு வழங்கக் கூடிய நேர்மையானவர்கள் எவரும் தென்னிலங்கையில் இல்லை. சந்திரிகா அணியில் இருப்பவர்களும் புதியவர்கள் இல்லை. அவர்களும் கடந்த காலத்தில் வேறு முகங்களுடன் ஆட்சியில் இருந்தவர்கள்தான். ஆக மொத்தத்தில் சந்திரிகா அம்மையாரின் கூட்டணி கூட, புதிய மொந்தையில் பழைய கள்ளின் நிலைதான்.

### நாளொரு நல்வார்த்தை

“எல்லா உண்மைகளையும் அவை கண்டுபிடிக்கப்பட்டவுடன் புரிந்துகொள்வது எளிதானது, அவற்றைக் கண்டுபிடிப்பதே முக்கியமான விடயம்”
*–கலிலியோ கலிலி*




# மஹிந்தானந்தவை வைத்து கோத்தாபய அரசுக்கு ‘அடி’

## பிரதான எதிரணி வியூகம்

**கொழும்பு, ஜன.18**

**விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவருவது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஆராய்ந்துவருகின்றது என அறியமுடிகின்றது.**

இது தொடர்பான ஆரம்பக்கட்டப் பேச்சுக்கள் இடம்பெற்றுவருகின்றன எனவும், பங்காளிக்கட்சிகளுடனும் ஆலோசனை நடத்தப்படுகின்றது என்றும் தகவல்கள் கிடைத்துள்ளன.

முறையற்ற உர முகாமைத்துவத்தால் விவசாயத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு, முறையற்ற கொடுக்கல், வாங்கல்கள் காரணமாக சீனாவுடன் ஏற்பட்டுள்ள இராஜதந்திர நெருக்கடி, திரவ உரம் இறக்குமதியில் இடம்பெற்றது என்று கூறப்படும் மோசடி உட்பட மேலும் பல விடயங்களை மையப்படுத்தியே நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பது தொடர்பாக ஆராயப்படுகின்றது.

ஆனால் தற்போதைய சூழ்நிலையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தால் அது அரசுக்கு வாய்ப்பாக அமைந்துவிடும் எனவும், அதன்மூலம் அரசு பலமடையும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆனால் விவசாயத்துறை அமைச்சரை விமர்சித்து வரும் சுதந்திரக்கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப் பெறமுடியும். அவ்வாறு இல்லாவிட்டால், அவர்கள் வாக்கெடுப்பை புறக்கணித்தால்கூட அரசின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆட்டம் காணும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் இந்தவாரத்தில் இறுதி முடிவு எட்டப்படும் என்று தெரியவருகின்றது. (எ-44)

# பொலிஸ்மா அதிபர் பதவியை கர்தினாலுக்கே வழங்குங்கள்!

## ஞானசார தேரர் கிண்டல்

கொழும்பு, ஜன.18

அதிகாரபூர்வமற்ற பொலிஸ் மா அதிபர் போன்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை செயற்படுகின்றார். அவருக்கு நாட்டின் பொலிஸ்மா அதிபர் பதவியை வழங்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலரும், ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ ஜனாதிபதி செயலணியின் தலைவருமான கலகொட அத்தே ஞானசார தேரர். பதுளையில் நேற்றுமுன்தினம் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு வைக்கப்பட்ட சம்பவம் ஒரு சாதாரண சம்பவம் அல்ல. இந்த நாட்டில் விசாரணை நடத்தப்படும் முறை ஒன்று உள்ளது. கர்தினால் பொலிஸ்மா அதிபரை விமர்சனம் செய்திருக்கிறார். அப்படியானால் பொலிஸ்மா அதிபர் பதவியை ஜனாதிபதி கர்தினாலிடம் கொடுப்பதே பொருத்தமானது - என்றார். (எ-இ)

நாளை 19.01.2022 புதன்கிழமை தை - 05

சுபநேரம் : 05.05 - 06.35
ராகுகாலம் : 12.35 - 02.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களை ஏமாற்றுவதில் தந்தைக்கு நிகரான மகன்

*சாடுகின்றார் பழனி திகாம்பரம்*

கொழும்பு, ஜன.18

தனது தாத்தாவும், அப்பாவும் மக்களை எப்படி ஏமாற்றினார்களோ, அவ்வாறே இப்போது பேரனும் ஏமாற்றுகின்றார். நான் அமைச்சராக இருந்தபோது அமைக்கப்பட்ட வீடுகளின் சாவிகளைப் பலவந்தமாகப் பெற்று, அவற்றை மீள மக்களுக்குக் கையளிக்கும் அரசியலே நடக்கின்றது.

இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பொங்கல் விழா நுவரெலியாவில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லாட்சிக் காலமே மலையகத்துக்குப் பொன்னான காலம். அந்தக் காலகட்டத்தில் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தற்போதைய கோத்தாபய அரசாங்கம் மலையகத்துக்கு மட்டுமல்ல, முழு நாட்டுக்குமே சாபக்கேடு. கூட்டு ஒப்பந்தம் இருந்தால் மலையக மக்களின் பிரச்சினை தீரும் என்று சிலர் கூறுகின்றனர். தாத்தா, அப்பா ஏமாற்றியது போன்று பேரனும் மக்களை ஏமாற்ற முயல்கின்றார். இந்த ஆட்சியின்கீழ் எமது மக்களுக்கு நன்மை பயக்கவில்லை. புதிய ஆட்சியின்கீழ் மலையக மக்களுக்கு எல்லாவற்றையும் பெற்றுக்கொடுப்போம் - என்றார். (ஏ-இ)

# 20 நாள்களுக்குப் போதுமான எரிபொருளே கையிருப்பில்

## நினைவுபடுத்துகின்றார் கம்மன்பில

**கொழும்பு,ஜன.18**

**நாட்டில் இன்னும் 20 நாள்களுக்குப் போதுமான எரிபொருளே கையிருப்பில் உள்ளது என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன் பில தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை நாங்கள் தடையின்றி எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்தபோதும், நாளுக்கு நாள் நிலைமை சாத்தியமில்லாத கட்டத்தை நெருங்கிவருவதை உணர்கின்றோம்.

பெற்றோல் மற்றும் டீசலின் சில்லறைத் தேவைக்காக வெளிநாட்டு நாணயத்தைப் பாதுகாப்பதில் சிரமம் உள்ளது.

மின்சார சபையில் பாதிப்பு ஏற்பட்டுள்ள போதிலும், இலங்கை மின்சார சபைக்கும் டொலரைத் தேடும் சுமையை எம்மால் ஏற்க முடியாது.

எங்களின் எரிபொருள் கட்டணத்தை முழுமை செய்ய மாதமொன்றுக்கு 400 மில்லியன் டொலர் தேவை.

எனவே தடையற்ற எரிபொருள் விநியோகத்தைப் பேணுவது சாத்தியமற்ற மட்டத்தை எட்டுகின்றது. வரும் நாள்கள் மிகவும் சவாலானவையாக இருக்கும் - என்றார். (ஒ-4-இ)



## காட்டு யானைகள் அட்டகாசம்

கிளிநொச்சி.ஜன.18

இராமநாதபுரம், புதுக்காடு, அழகாபுரி பகுதியில் , அறுவடைக்குத் தயாராக இருந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரவள்ளிக் கட்டைகள் காட்டு யானைகளால் அழிக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை நான்கு காட்டு யானைகள் கிராமத்துக்குள் புகுந்து வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்பட்ட மரவள்ளி, வாழை, தென்னைமரங்களை முற்றாக அழித்துள்ளன.

தற்போதை விலை உயர்வால் அதிகளவான வீடுகளில் உணவுக்காக மரவள்ளி கட்டைகள் நடுகை செய்யப்பட்டன. அவை தற்போது பிடுங்குவதற்கு தயாராக இருந்தபோது, யானைகள் அவற்றை அழித்துள்ளன.

கிராம அலுவலர், பிரதேச செயலர் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்குப் பலமுறை தெரியப்படுத்தியும் பயனில்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வந்து எம்மைக் காப்பாற்ற வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-113)

## மூடநம்பிக்கையை விடுத்து பூஸ்டர் டோஸைப் பெறுங்கள்

*மருத்துவர் ஆலோசனை*

கொழும்பு.ஜன.18

எதிர்காலத்தில், ஒமிக்ரோன் பிறழ்வு நாட்டின் முன்னணி வைரஸாக மாறக்கூடும். எனவே அனைவரும் கொரோனாத் தடுப்பூசியின் பூஸ்டர் டோஸை விரைவில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று குழந்தைகள் நல மருத்துவர் சன்ன டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஒமிக்ரோன் மாறுபாடு இலங்கை முழுவதும் வேகமாகப் பரவுவதற்கான தெளிவான சாத்தியக்கூறுகள் அதிகளவில் உள்ளன என்று மரபணு ஆய்வுகளின் முடிவுகள் கூறுகின்றன. அதற்கான எதிர்ப்புச் சக்தியை ஏற்படுத்திக்கொள்வது அவசியம் - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

## மாற்றமடையும் ஒமிக்ரோன் திரிபு

கொழும்பு.ஜன.18

ஆதிக்கம் செலுத்தும் வைரஸாக மாற்றமடையும் ஒமிக்ரோன் திரிபின், இரண்டு துணைப்பரம்பரைகள் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் துறையின் தலைவர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இலங்கையில் ஒமிக்ரோன் தொற்றாளர்களின் எண்ணிக்கை 208 ஆக அதிகரித்துள்ளது.

புதிதாகக் கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளானவர்களில் பெரும்பாலானோர் கொழும்பு, கம்பஹா, காலி, மாத்தறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் வசிப்பவர்கள்.

ஒமிக்ரோனின் மூன்று துணைப் பரம்பரைகள் உலகளவில் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு இலங்கையில் கண்டறியப்பட்டுள்ளன.

அறிகுறிகளைக் காட்டாத நிலையில், நாட்டுக்கு வருகை தந்த சிலரிடம் தொற்று இனங்காணப்பட்டுள்ளது- என்றார். (ஒ-4-இ)

## சாவ. மருத்துவமனையில் கழிவுகளை எரியூட்டுவதால் அயற்பகுதிகளில் துர்நாற்றம்

*பொறுப்பதிகாரி மறுப்பு*

சாவகச்சேரி, ஜன. 18

மனித சுவாசத்துக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேகரிக்கப்படும் கழிவுகள் இரவு வேளைகளில் குழியில் போட்டு எரியூட்டப்படுவதால், எரிக்கப்படும் கழிவுகளிலிருந்து வெளியேறும் புகையினால் சுவாசிக்க முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டு கின்றனர். எனினும் இந்தக் குற்றச்சாட்டு க்களை மருத்துவமனையின் பொறுப்பதிகாரி திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

மருத்துவமனையில் எரியூட்டி இல்லாதமையால் மருத்துவமனையின் விடுதிகள் மற்றும் வெளிநோயாளர் பிரிவு மற்றும் வளாகத்தில் சேகரிக்கப்படும் கழிவுகள் வளாகத்தின் பின்புறத்தில் காணப்படும் பெரிய குழியில் போடப்பட்டு, இரவு வேளையில் எரிக்கப்படுகின்றன என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இது தொடர்பில் மருத்துவமனையின் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை. மருத்துவமனையின் கழிவுகள் லொறிகள் மூலம் தெல்லிப்பழை மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றன - என்றார். (ம-9-159)

### சடலம் மீட்பு!

முல்லைத்தீவு, தேவிபுரம் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கிலிருந்து சடலமாக நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளார். கணேஸ் வீதி தேவிபுரம் பகுதியில் வசித்துவரும் ஆறுமுகம் பிரதீபன் (வயது-38) என்ற நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-19)

## இலங்கையின் பொருளாதாரம் சரியான பாதையை நோக்கி!

*மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு*

கொழும்பு.ஜன.18

இலங்கையின் பொருளாதாரம் சரியான பாதையை நோக்கியே பயணித்துக் கொண்டிருக்கின்றது என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

சில மாதங்களுக்கு முன்னர் இருந்த பொருளாதாரத்துடன் ஒப்பிடுகையில், நாடு செழுமையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

எதிர்காலத்தில் நாங்கள் எந்தப் பிரச்சினையையும் எதிர்கொள்ள மாட்டோம். 500 மில்லியன் டொலர் கடனையும் செலுத்தமுடியும்.

ஏனைய நாடுகளுடன் இராஜதந்திர உறவுகள் பேணப்படவேண்டும். வாக்குறுதியளிக்கப்பட்ட திகதியில் கடன்கள் திருப்பிச் செலுத்தப்படும்.

இதுவரை 12 ஆயிரத்து 400 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைத் திருப்பிச் செலுத்தியுள்ளோம். இன்னும் 3 ஆயிரத்து 100 மில்லியன் அமெரிக்க டொலர் கையிருப்பு உள்ளது - என்றார். (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மனதில் இருந்து வந்த இனம் தெரியாத குழப்பம் நீங்கும். புதிய முயற்சிகளை உற்சாகத்துடன் மேற்கொள்வீர்கள். வாழ்க்கைத் துணை வழி உறவுகளால் குதூகலம் ஏற்படும்.

**இடபம்:** எதிர்பார்த்த நன்மைவரும். சகபணியாளர் ஒருவர் உதவுவார். குடும்பத்தில் நிலவி வந்த சில சங்கடங்கள் தீரும். அக்கம்பக்கத்தினருடன் இருந்து வந்த பிரச்சினைகள் தீரும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை மதியத்துக்கு மேல் தொடங்கவும். நெருங்கிய நண்பர்கள் உங்களிடம் உதவி கேட்டுவருவார்கள். எதிர்பார்த்த விடயம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** எதிரிகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் முடிவுக்கு வரும். திடீர் செலவு ஒன்று ஏற்படக்கூடும். கவர்ச்சி அம்சம் அதிகரிக்கும். சுபச்செலவுகள் வரும். வங்கி இருப்பு குறையாது. கையொப்பமிடுவதில் கவனம் தேவை.

**சிம்மம்:** கொடுத்த கடன் தொகை திரும்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குழந்தைகளால் மகிழ்ச்சியும் பெருமிதமும் ஏற்படும். மதியத்துக்கு மேல் உறவினரால் நன்மை ஒன்று நிகழும்.

**கன்னி:** சகோதரர்களுக்காக இன்று செலவுசெய்ய நேரிடும். புதியவர்களிடம் கவனமாக இருக்கவும். வியாபாரம் செழிக்கும். குழந்தைகள் பற்றிய கவலைகள் மெல்ல மெல்லக் குறையும்.

**துலாம்:** குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். ஆன்மிகத்தில் நாட்டம் கூடும். குழந்தைகளால் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செலவுகள் ஏற்படக்கூடும். பேச்சு, செயற்பாடுகளில் இன்று கவனமாக இருக்கவும்.

**விருச்சிகம்:** பணம், ஆரோக்கிய விடயங்களில் கவனமாக இருக்கவும். விவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. உடல் நலத்தில் கவனம் தேவை. வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும்.

**தனுசு:** உறவினர்களுடன் அனுசரணையாக நடந்து கொள்ளவும். கணவன் - மனைவி இடையே இருந்த கருத்து வேறுபாடு நீங்கும். சகோதரர்களால் இருந்துவந்த சங்கடங்கள் தீரும்.

**மகரம்:** வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் இருந்து வந்த மனவருத்தங்கள் நீங்கும். உழைப்பு அதிகரிக்கும். நிதி நிலையை கவனிக்கவும்.

**கும்பம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் இன்று அதிகம் தேவைப்படும். பேச்சில் கவனம் தேவை. உறவினருடன் விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். வாழ்க்கைத்துணை மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மீனம்:** தாயின் அன்பும், ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். பண விடயங்களில் கவனமாக இருப்பது நல்லது. அரச வகையில் எதிர்பார்த்த விடயம் அனுகூலமாக முடியும். தொல்லைகள் நீங்கும்.



## 'கதக்' கலைஞர் காலமானார்

புதுடில்லி, ஜன.18

புகழ்பெற்ற 'கதக்' நடனக் கலைஞர் பண்டிட் பிர்ஜு மகாராஜ் உடல்நலக் குறைவால் கடந்த திங்கட்கிழமை காலமானார். சமீப காலமாக சிறுநீரகப் பிரச்சினைக்குச் சிகிச்சைப் பெற்று வந்த இவர் தனது 83ஆவது வயதில் காலமாகியுள்ளார்.

இவரின் கதக் நடனக் கலையின் திறமையை அங்கீகரித்து இந்தியாவின் இரண்டாவது உயரிய விருதான பத்ம விபூஷண் விருதை இந்தியா வழங்கி கௌரவித்திருந்தது.

மேலும், கமல்ஹாசன் நடித்த விஸ்வரூபம் படத்தில் வரும் 'உனைக் காணாத' என்ற கதக் நடனப் பாடலை பிர்ஜு தான் வடிவமைத்துள்ளார். மேலும், கமல்ஹாசனுக்கு 'கதக்' கற்றுக் கொடுத்ததும் பிர்ஜு என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## இந்தியாவில் கொரோனாவால்
# பெற்றோரை இழந்த 1.47 லட்சம் சிறார்கள்

புதுடில்லி, ஜன.18

**கடந்த 2020ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஒரு லட்சத்து 47ஆயிரத்து 492 சிறார்கள் கொரோனாத் தொற்றுப் பாதிப்பால் பெற்றோரில் ஒருவரையோ அல்லது இருவரையுமோ இழந்துள்ளனர் என தேசிய சிறார் உரிமைகள் ஆணையம் உச்சநீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.**

கொரோனா பாதிப்பால் பெற்றோரை இழந்த சிறார்களின் விவரங்களை மாநில அரசுகளும் யூனியன் பிரதேச நிர்வாகங்களும் 'பால் ஸ்வராஜ் கொவைட் கேர்' வலைத்தளத்தில் பதிவு செய்து வருகின்றன.

அதில் கடந்த 11ஆம் திகதி பதிவிடப்பட்ட விவரங்களின்படி, கடந்த 2020ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி முதல் 1,47,492 சிறார்கள் பெற்றோரில் ஒருவரையோ அல்லது இருவரையுமோ இழந்துள்ளனர். அவர்களில் 76ஆயிரத்து 508 சிறுவர்களும் 70ஆயிரத்து 980 சிறுமிகளும் 4 இருபாலினத்தவர்களும் அடங்குகின்றனர்.

அதிகபட்சமாக ஒடிசாவில் 24ஆயிரத்து 405 சிறார்களும், மகாராஷ்டிராவில் 19ஆயிரத்து 623 சிறார்களும், குஜராத்தில் 14ஆயிரத்து 770 சிறார்களும், தமிழ்நாட்டில் 11ஆயிரத்து 014 சிறார்களும், உத்தரபிரதேசத்தில் 9,247 சிறார்களும், ஆந்திராவில் 8 ஆயிரத்து 760 சிறார்களும், மத்திய பிரதேசத்தில் 7ஆயிரத்து 340 சிறார்களும், மேற்கு வங்கத்தில் 6ஆயிரத்து 835 சிறார்களும், டில்லியில் 6 ஆயிரத்து 629 சிறார்களும், ராஜஸ்தானில் 6,827 சிறார்களும் கொரோனா பாதிப்புக்களால் பெற்றோரை இழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



## சாரதிக்குத் திடீர் வலிப்பு: சாரதியாக மாறிய பெண்

மகாராஷ்டிரா, ஜன.18

இந்தியாவில் பஸ் சாரதிக்கு திடீரென வலிப்பு ஏற்பட்ட நிலையில் 40 வயதான பெண் சமயோசிதமாக பஸ்ஸைச் செலுத்தி அதில் இருந்த பல பயணிகளின் உயிரைக் காப்பாற்றியுள்ளார். மகாராஷ்டிராவின் புனேவில் உள்ள ஷிரூரில் சுற்றுலாவுக்குச் சென்ற பெண்களும் குழந்தைகளும் பஸ்ஸில் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

அப்போது, பஸ் சாரதிக்கு திடீரென வலிப்பு ஏற்பட்டு சரிந்துள்ளார்.

அந்த சமயத்தில் பயணிகளில் ஒரு பெண் தாமாக முன்வந்து பஸ்ஸை இயக்குவதாகச் சொல்லி பஸ்ஸை செலுத்தி அருகே இருந்த மருத்துவமனையில் சாரதியை அனுமதித்துவிட்டு, பின்னர் பிற பயணிகளை அவரவர் நிறுத்தங்களில் கொண்டுசென்று சேர்த்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## பிக்பாஸ் சீசன் - 5 ராஜூ வெற்றிவாகை



சென்னை, ஜன.18

விஜய் ரிவியில் உலக நாயகன் தொகுத்து வழங்கி வரும் பிக்பாஸ் சீசன் 5 போட்டியின் வெற்றியாளராக நடிகர் ராஜு வெற்றிவாகை சூடியுள்ளார்.

இறுதிப்போட்டியாளராக இருந்த ஐந்து பேரில் ராஜு, பிரியங்கா, பவானி ஆகிய மூவர் மட்டுமே இறுதிபோட்டியாளர்களாகத் தேர்வு செய்யப்பட்டிருந்தனர்.

இதில், ராஜு முதலிடத்தையும், பிரியங்கா இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

பிக்பாஸ் சீசன் - 5 நிகழ்ச்சி கடந்த ஒக்ரோபர் 3ஆம் திகதி ஆரம்பமாகியது. இந்த சீசனில் மொத்தம் 18 போட்டியாளர்கள் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)



உலகப் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டுக் களமான மதுரைமாவட்டம் அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நேற்று நடைபெற்றன. பல நூறு காளைகள் போட்டியில் அவிழ்க்கப்பட்டன. ஆயிரத்துக்கு மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் இதில் பங்கெடுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்று தைப்பூசத்தை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**



# கேட்டவரம் கிடைக்கும் தைப்பூச நன்னாள்

தை மாதம் என்பது தெய்வீக மாதமாகும். இந்தத் தைமாதத்தில் தான் பூச நட்சத்திரமும் பௌர்ணமியும் கூடிவரும். அன்றைய தினமே தைப்பூசமாகக் கொண்டாடப்படுகின்றது. தைப்பூசத் தினத்தில்தான் இந்த அகிலம் தோன்றியதாக ஒரு ஐதீகம் உள்ளது. இந்த நன்னாளானது முருகனுக்கு உகந்த நாளாகும். அதோடு சிவனுக்கும், குரு பகவானுக்கும் கூட இந்த நாள் சிறப்புடைய தாகும். பல சிறப்புக்கள் மிக்க தைப்பூச நாளன்று விரதம் இருந்தால் கேட்ட வரத்தைத் தந்தருள்வார் முருகன் என்பது நம்பிக்கை.

தை மாதத்தில் வரும் பூச நட்சத்திரத்தன்று கொண்டாடப்படும் இந்தத் தைப்பூசம் அனைத்து முருகன் கோவில்களிலும் கோலாகலமாகக் கொண்டாடப்படும்.

**தைப்பூச விரதம் இருப்பது எப்படி?**

நாள் முழுவதும் பூச நட்சத்திரம் இருப்பதால் காலை முதல் மாலை வரை முருகனை நினைந்து உபவாசம் இருந்து முருகனைத் தரிசித்து, வழிபாடு செய்வது நல்லது. இதில் காலை மதியம் என இருவேளையும் பால், பழம் மட்டுமே அருந்தி விரதம் இருந்து மாலையில் முருகன் கோவிலுக்குச்சென்று வழிபடுவது சிறந்தது. முருகனை வழிபடும் சமயத்தில் முருக வேலையும் சேர்த்து வழிபடுவது நல்லது. முடிந்தால் காலை, மாலை என இருவேளையும் முருகன் கோவிலுக்குச் சென்று வழிபடுவது மேலும் சிறப்பைச் சேர்க்கும்.

முருக பக்தர்கள் பலர் தைப்பூச விரதத்தை 48 நாள்கள் இருப்பது வழக்கம். மார்கழி மாதத்தில் தொடங்கி தைப்பூசம்வரை விரதம் இருப்பது வழக்கம். அன்னை பார்வதிதேவி, முருகனுக்கு ஞானவேல் வழங்கியது இந்த நன்னாளில் தான். அதனால்தான் அன்று வேலையும் வணங்குவது நல்லது என்று ஆச்சாரியார்கள் கூறுகின்றனர்.

அந்த ஞானவேல் கொண்டே ஞானபண்டிதன் அசுரவதம் புரிந்தார் என்பது வரலாறு. தைப்பூச நாளில் முருகனுக்குரிய வேலை வழிபடுவதன் பயனாக தீய சக்திகள் நம்மை அண்டாது.

இதனால் வறுமை நீங்கி செல்வமும், வசதி வாய்ப்புகளும் கிடைக்கப்பெறும் என்பது ஐதீகம். இந்த நாளில் குரு பகவானையும், சிவபெருமானையும், முருகப் பெருமானையும் வழிபடுவது மிகுந்த விசேடமாகும்.

தைப்பூசநாளில் முருகனுக்குரிய வேலை வழிபடுவதன் பயனாக தீயசக்திகள் நம்மை அண்டாது. இதனால் வறுமை நீங்கி செல்வமும், வசதி வாய்ப்புகளும் கிடைக்கப்பெறும் என்பது ஐதீகம். இந்த நாளில் குருபகவானையும், சிவபெருமானையும், முருகப்பெருமானையும் வழிபடுவது மிகுந்த விசேடமாகும்.

# தைப்பொங்கலை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு டேவிட் பீரிஸ் குழுமத்தால் பல்வேறு பரிசுகள்!



ஐந்து தசாப்தங்களுக்கும் மேலான வரலாற்றையும், இலங்கையின் மிகப்பெரிய மற்றும் முக்கிய நிதி ரீதியான ஸ்திரமான கூட்டு நிறுவனங்களில் ஒன்றாகவும் திகழும் டேவிட் பீரிஸ் குழுமம் ஆரம்பகாலங்களில் வாகனங்கள் தொடர்பான வியாபாரத்தில் முழுமையாக ஈடுபட்டு வந்ததோடு தற்போது பல்வேறு பரிமாணங்களிலும் நாடு முழுவதும் அதன் கிளைகளை அமைத்து 2 ஆயிரத்துக்கும் அதிகமான சேவை வழங்குநர்களைத் தன்னகத்தே கொண்டு இலங்கை முழுவதும் அதன் சேவையை பரவலாக்கியுள்ளது. வாகனங்கள் மற்றும் அது சார்ந்த சேவைகள், நிதி சேவைகள், லொஜிஸ்டிக்ஸ், தகவல் தொழில்நுட்பம், சொத்துகளுக்கான முதலீடுகள், பொழுது போக்கு வாகனங்கள் மற்றும் இயற்கை விவசாய உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதி என பல தொழில்களில் ஈடுபட்டுவரும் தனித்துவமான 18 நிறுவனங்களை உள்ளடக்கிய டேவிட் பீரிஸ் குழுமத்தின் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவெட்) லிமிட்டெட், அசெட்லைன் லீசிங் கம்பனி, ரியசக்வல, அசல் உதிரி பாகங்கள், டி பி குளோபல் வென்ச்சர்ஸ் (பிரைவட்) லிமிட்டெட் போன்ற முக்கிய நிறுவனங்கள் அவற்றின் பிரத்தியேக சேவைகளை வடமாகணத்திலும் வழங்கி வருகின்றன.

பஜாஜ் வாகனங்களுக்கான ஏக விநியோகஸ்தரான டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட் ஆனது டேவிட் பீரிஸ் குழுமத்தின் மிகப் பிரதானமான நிறுவனமாகும். ஆயிரத்து 700க்கும் மேற்பட்ட நிகழ்நிலை வலையமைப்பைக் கொண்ட இந்த நிறுவனம் வாகனம் மற்றும் வாகன உதிரிபாகங்கள் விற்பனை சேவைகளை நாட்டின் பல பாகங்களிலும் வழங்கி வருகின்றது.

டேவிட் பீரிஸ் குழுமத்தின் முதன்மையான நிதிசார் சேவைகளை வழங்கும் நிதிச் சேவைப் பிரிவான அசெட்லைன் லீசிங் நிறுவனமானது குத்தகை, காப்பீட்டுத் தரகு, போர்ட்போலியோ முகாமைத்துவம், சொத்துமுதலீடு, சொத்து வர்த்தகம் மற்றும் பெருநிறுவன சேவைகளை வழங்குகிறது. அத்துடன் நாடளாவிய ரீதியில் 54 கிளைகளுடன் இயங்கி வருவதோடு குத்தகை மற்றும் கடன் தயாரிப்புகளுடன் மக்களின் நிதித் தேவைகளை தொடர்ந்து பூர்த்தி செய்து வருகிறது. தனிநபருக்கு மட்டுமன்றி குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு மிகப் பெரிய பங்களிப்பையும் ஆற்றுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

Riyasakwala என்பது வாகனங்கள் இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக புதிய வாகனப் பற்றாக்குறையை பூர்த்திசெய்ய அமைக்கப்பட்ட டேவிட் பீரிஸ் குழுமத்தின் பதிவு செய்யப்பட்ட வாகன வணிகமாகும். பதிவு செய்யப்பட்ட வாகன[illegible] விற்க அல்லது பரி[illegible] முதன்மையான நிறுவனமாக தன்னை நிலைநிறுத்திக்கொண்டுள்ளது. மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் என அனைத்து விதமான வாகனங்களுக்குமான தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது.

Riyasakwala இலிருந்து வாகனங்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள், டேவிட் பீரிஸ் குழுமத்தின் Assetlien leasing Company Limited மற்றும் Assetlien Insurnace Brokers (Pirvate) Limited மூலம் Riyasakwala கிளைகளிலும், நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள அனைத்து DPMC காட்சியறைகளிலும் ஒரே கூரையின் கீழ் குத்தகை மற்றும் காப்புறுதி வசதிகளைப் பெற்றக்கொள்ள முடியும். டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனம் அனைத்துவிதமான பஜாஜ் வாகனங்களுக்குமான அசல் உதிரிப் பாகங்களை வழங்குவதை உறுதி செய்கிறது. DPMC இன் அடையாளம் காணும் பொறிமுறையின் ஊடாக அசல் உதிரிப் பாகங்களை அடையாளம் காணமுடியும். உதிரிப் பாகங்களின் மேல் பொருத்தப்பட்டிருக்கும் குட்டி யானை சின்னம் மற்றும் DPMC இன் முப்பரிமாண வடிவ ஸ்ரிக்கர்கள் உதிரிப் பாகங்கள் அசல் என்பதை வாடிக்கையாளருக்கு உறுதி செய்து வருகிறது.

டேவிட் பீரிஸ் குழுமத்தின் உணவு மற்[illegible]பிரிவான D P Global Ventures (Pirvate) Limited (DPGV) உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கு இயற்கை மற்றும் அனைத்து இயற்கை மதிப்பு கூட்டப்பட்ட விவசாயப் பொருள்களையும் உற்பத்தி செய்து வருகிறது. உள்நாட்டு விவசாயிகளின் அறுவடையை அடிப்படையாகக் கொண்ட பல உணவுப்பொருள்களை அறிமுகப்படுத்தியுள்ளதோடு பல ஆண்டுகளுக்கும் மேலாக கனடா, ஜேர்மனி, அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலிய போன்ற சர்வதேச நாடுகளுக்கு தனது தயாரிப்புக்களை விற்பனை செய்து அதன் நாமத்தை சர்வதேச சந்தையிலும் பதிவு செய்துள்ளது.

மேலும் இவ்வருடம் தைப்பொங்கலை முன்னிட்டு நடைபெறும் டேவிட் பீரிஸ் குழுமத்தின் தைப்பொங்கல் பரிசை வென்றிட யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் 21ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை முற்பகல் 10 மணி முதல் மாலை 7 மணிவரையில் முற்றவெளி மைதானத்தில் இடம்பெறவிருக்கும் யாழ். சர்வதேச வர்த்தக சந்தை ஸ்டோலில் கலந்துகொண்டு பரிசுக்கூப்பனைப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வருடம் தைப்பொங்கல் பண்டிகையை டேவிட் பீரிஸ் குழுமத்தோடு கொண்டாடிட நீங்களும் இணைந்திருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரக்கறிகளின் விலை திடீரென அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ். குடாநாட்டில் மரக்கறிகளின் விலை திடீரென அதிகரித்துள்ளது.

தைத்திருநாள், தைப்பூசம் போன்ற சுப வைபவங்களால் மரக்கறி வகைகளின் பாவனை அதிகரித்ததால் அவற்றின் விலையும் சடுதியாக அதிகரித்துள்ளது. கத்தரிக்காய், பாவற்காய், பயிற்றங்காய், கோவா போன்ற மரக்கறிகள் கிலோ 400 ரூபாவுக்கு மேல் சந்தையில் விற்கப்படுகின்றன. (ஒ-ரி1-17)

## வெளிநாடுகளிலிருந்து பண வருகை வீழ்ச்சி

வெளிநாடுகளில் பணியாற்றுவோர் இலங்கைக்கு பணம் அனுப்பும் தொகை வீழ்ச்சியடைந்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் ஒப்பீடும்போது 2021ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் அந்நியச் செலாவணி வருமானம் 60 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

2020 ஆம் ஆண்டில் 7193.9 மில்லியன் டொலர் அந்நியச் செலாவணி கிடைக்கப் பெற்றது. 2021ஆம் ஆண்டு 5491 மில்லியன் டொலராகக் குறைவடைந்துள்ளது. (ஒ-4-இ)



முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குட்பட்ட கற்பகா அறநெறிப் பாடசாலையின் 4 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும் மாணவர்கள் கௌரவிப்பும் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ரி1-19)

# நாடு வறுமையில்; மக்கள் செல்வந்தர்கள் அதனால் இடரைத் தாங்கமுடியவில்லை

### மன்னார் சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னார், ஜன. 18

**எங்கள் நாடு வறுமையாகவும் மக்கள் செல்வந்தர்களாகவும் இருக்கிறார்கள். அதனால்தான், கொரோனா போன்ற ஒரு திடீர் இடர் வரும்போது தாக்குப் பிடிக்க முடியாமல் நாடு திண்டாடுகிறது. ஆனால், ஒரு நாடு செல்வந்த நாடாகவும் அங்கு இருக்கும் மக்கள் சாதாரண வாழ்வு வாழ்பவர்களாகவும் இருந்தால்தான் அந்த நாடு நீடித்து நிலைத்திருக்கும்.**

இவ்வாறு, மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார். மன்னாரில் கடந்தவாரம் நடைபெற்ற குறுந்திரைப்பட வெளியீட்டு நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்; மேற்கத்திய நாடுகள் செல்வந்த நாடுகள். ஆனால், அங்குள்ள மக்கள் உழைக்க வேண்டும், உழைப்பதற்கு வரி செலுத்த வேண்டும், உழைத்தால்தான் வருமானம் வரும், சும்மா இருந்தால் பணம் வராது என்ற சிந்தனை ஆழவே ஊன்றியுள்ளது.

எமது நாட்டில் டொலர் பிரச்சினை பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. குருதியை வியர்வையாக சிந்தி உழைக்கும் மலையகத் தொழிலாளர்கள், மத்திய கிழக்கு நாடுகளில் அடிமைகளாக வேலை செய்யும் எங்களுடைய பெண்கள், அனுப்பும் டொலரைத்தான் இவ்வளவு காலமும் நாங்கள் வீண்விரயம் செய்து. எதிர்காலங்களைப் பற்றிச் சிந்திக்காமல் வாழ்ந்து கொண்டிருந்தோம்.

அது இல்லாமற் போனவுடன் ஒவ்வொருநாளும் உழைத்துச் சாப்பிடும் அடிமட்ட ஏழை மக்களை விட நடுத்தர மக்களின் வாழ்க்கை நடுத்தெருவுக்கு வரும்நிலைமை ஏற்பட்டுள்ளது - என்றார். (கு-213)

## தேவையான எரிவாயு சந்தைக்கு விநியோகம்

கொழும்பு, ஜன.18

நாளாவிய ரீதியில் தேவையான எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. அதனால் மக்கள் வரிசைகளில் காத்திருக்கத் தேவையில்லை என்று லிற்றோ காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சிறிய அளவிலான வர்த்தக நிலையங்களுக்கு அடுத்த வாரத்தில் இருந்து தட்டுப்பாடின்றி எரிவாயு விநியோகிக்கப்படும்.

இரண்டரைக் கிலோ எடைகொண்ட எரிவாயு சிலிண்டர்களைப் பகிர்ந்தளிப்பதில் சிறு தாமதம் நிலவுகின்றது என்றும் லிற்றோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஒ-4-இ)

## நாணயப் பயன்பாட்டைக் குறைக்க முற்கொடுப்பனவு அட்டை முறைமை

### தனியார் பேருந்துச் சங்கம் நடவடிக்கை

கொழும்பு, ஜன.18

பொதுப்போக்குவரத்தில் நாணயப் பயன்பாட்டைக் குறைக்கும் நோக்குடன், முற்கொடுப்பனவு அட்டை மற்றும் கியூ.ஆர் குறியீட்டு முறைமைகளை அறிமுகப்படுத்த தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேயரத்ன தெரிவிக்கையில்;

இதற்கான முன்னோடித் திட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.

தெஹிவளை பத்தரமுல்ல இடையேயான 163 ஆம் இலக்க வழித்தடத்தில் இந்தத் திட்டம் பரிசோதிக்கப்படும்.

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்துவார்.

பயணிகள் தமது அலைபேசிகளைப் பயன்படுத்தி பயணிக்கக்கூடிய வகையில் கியூ.ஆர் முறைமை அறிமுகப்படுத்தப்படும். எனினும், புதிய முறைமைக்கு அதிகாரிகள் இன்னும் அனுமதி வழங்கவில்லை.

தொடர்ந்தும் போக்குவரத்து அமைச்சர் மற்றும் மேல்மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவையினருடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படும் -என்றார். (ஒ-4-இ)

## வடதாரகையில் இனப்பாகுபாடா?

### பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி

யாழ்ப்பாணம், ஜன. 18

வடதாரகைப் படகு கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதால் தென்னிலங்கை சுற்றுலாப்பயணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது என்றும், கடந்த சனிக்கிழமை குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னரே படகு சென்றுவிட்டதால் ஏராளமான மக்கள் காத்திருக்கவேண்டிய அவலம் ஏற்பட்டது என்றும் மக்கள் விசனம் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் புறப்படவேண்டிய வடதாரகைப் படகு பிற்பகல் 2 மணிக்கு நெடுந்தீவு இறங்குதுறையிலிருந்த பயணிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்டதால் பிற்பகல் 3 மணிக்கு பிரயாணம் செய்வதற்காகச் சென்ற நெடுந்தீவு மக்கள் ஏமாற்றத்துடன் இறங்குதுறையில் காத்திருக்க வேண்டிய நிலைமை காணப்பட்டது.

இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டபோது, கடற்படையினரே இதற்கான முடிவை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவித்தனர்.

நெடுந்தீவு குறிகாட்டுவான் கடற்போக்குவரத்து தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையே பொறுப்பு என்று கடந்த வருடம் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கூறப்பட்டது.

எனவே, வீதி அபிவிருத்தி அதிகார சபை நெடுந்தீவு மக்களது கடற்போக்குவரத்துத் தொடர்பாக பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபையுடன் இணைந்து சரியான நேர அட்டவணையைத் தயாரிக்கவேண்டும். நெடுந்தீவு மக்களுக்கான முக்கியத்துவத்தையும் வழங்க வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (கு-125)

## அடிக்கல் நடும் நிகழ்வு



கிருஷ்ணாபுரம் அம்பாள் குளம் பிரதான இணைப்பு வீதியின் பாலத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு, கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. பாலமானது 1.7 மில்லியன் ரூபாய் நிதியில் அமையப்பெறவுள்ளது. (ஒ-ரி1-6)

## அரிசி இறக்குமதிக்கு தனியாருக்கு அனுமதி

கொழும்பு, ஜன.18

சந்தையில் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த, அரிசியை இறக்குமதி செய்ய தனியாருக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சதொச மற்றும் பல்வேறு அரச கூட்டுத்தாபனங்களின் ஊடாக 5 லட்சம் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சந்தையில் இறக்குமதி செய்யப்படும் அரிசியின் விலை 150 ரூபாவைத் தாண்ட இடமளிக்கப்பட மாட்டாது -என்றார். (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சீனித்தம்பி கமலநாதன்



ஆண்டுகள் ஆறு கடந்தாலும்
என்றும் எம்முடனே
நீங்கள் வாழ்கிறீர்கள்
நீங்கள் காட்டிய வழியில் நாம்
வெற்றியுடன் நடந்து
செல்கின்றோம்.
என்றும் உங்கள் நினைவுடன்
நாம்....

க.பராக்கிரமன்
பராக்கோ மோட்டர்ஸ்,
நெல்லியடி.

# ஆசிரியர் பணியை விட சிறந்த தொழிலில்லை

## மாவட்டச் செயலர் பெருமிதம்

யாழ்ப்பாணம், ஜன.18

ஆசிரியர் தொழிலே உலகிலே மிகச் சிறந்த தொழில் என்று யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் அதிபர் அம்பலவாணருக்கு இடம் பெற்ற மணிவிழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்;

மனிதனுடைய வாழ்வில் சகல சௌபாக்கியங்களையும் அனுபவிப்பது என்பது கடவுள் கொடுத்த வரம். ஆசிரியர்கள் சாதித்தவை ஏராளம். ஒரு மெழுகுவர்த்தி தன்னை எரித்து உருக்கி எவ்வாறு பிறருக்கு வெளிச்சம் கொடுக்கின்றதோ, அதே போன்று ஒவ்வொருவரினது வாழ்விலும் ஒளி ஏற்றுவது எங்களுடைய ஆசிரியர்கள் தான்.

அவ்வாறானதொரு மகத்தான சிறப்பான பணி ஆசிரியர்களின் பணி -என்றார்.

(ஒ-4-159)

## தேவை

ஓய்வுபெற்ற கணக்காளர்,
களஞ்சியக் காப்பாளர் தேவை.
077 772 2215

# முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் விநியோக சேவைகளுக்கான பெறுகைகள் என்பவற்றிற்கான கேள்வி கோரல்கள் 2022/2023

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான தகைமை வாய்ந்த கேள்விதாரர்களின் முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்

| தொ. இல. | பெறுகை இல. | கேள்விகள் | காலப்பகுதி | உத்தரவாத பணத்தொகை |
|---|---|---|---|---|
| 01 | NP/21/5/DGHM/2022/01/AC | வளிச் சீராக்கி சேவை | 01.03.2022 - 28.02.2023 | 50,000.00 |
| 02 | NP/21/5/DGHM/2022/02/VeC | வாகன சுத்திகரிப்பு | 01.03.2022 - 28.02.2023 | 50,000.00 |
| 03 | NP/21/5/DGHM/2022/03/Lan | துணிகள் சலவை | 01.03.2022 - 28.02.2023 | 50,000.00 |

01. 2022 முதல் 2023 வரையான ஒருவருட காலப்பகுதிக்கு. சேவைகளுக்காக ஆர்வமுள்ள இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்கள். இவ் வைத்தியசாலை கணக்குக்கிளையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 1,500.00 இனை செலுத்தி கேள்வி ஆவணங்களை 19.01.2022 தொடக்கம் 01.02.2022 ஆம் திகதி வரை காலை 9.00மணி முதல் பி.ப.3.00 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.
02. அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு இடையூறின்றி சேவை வழங்கியிருக்க வேண்டும்.
03. கேள்விப்பத்திரங்கள் 01.02.2022 திகதி மு.ப. 10.00 மணிக்குமுன் கிடைக்ககூடியவாறு **தலைவர், கேள்விச் சபை மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு** எனும் முகவரிக்கு பதிவு தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக பெறுகை பெட்டியிலோ இடமுடியும். கேள்விகள் யாவும் 02.02.2022 மு.ப. 10.30 மணிக்கு விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.
04. ஏற்கனவே சேவையை வழங்கிவரும் ஒப்பந்தகாரர் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதியே தீர்மானம் எடுக்கப்படும்.
05. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கும் இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கும் பெறுகைகளின் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.
06. மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொ.இல.021 206 1423

**வைத்திய கலாநிதி** M.Umashankar
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு.**

(cr.37347A) (2.6)

# முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் பொருட்கள் வழங்குதலுக்கான பெறுகைகள் என்பவற்றிற்கான கேள்வி கோரல்கள் - 2022

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான தகைமை வாய்ந்த கேள்விதாரர்களின் முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்

| தொ. இல. | பெறுகை இல. | கேள்விகள் |
|---|---|---|
| 01 | NP/21/5/DGHM/2022/04/Con | சுத்திகரிப்பு பொருட்கள் |
| 02 | NP/21/5/DGHM/2022/05/Sta | காகிதாதிகள் |
| 03 | NP/21/5/DGHM/2022/06/Bui | கட்டிட பொருட்கள் |
| 04 | NP/21/5/DGHM/2022/07/Vec | வாகன டயர், பற்றரி |
| 05 | NP/21/5/DGHM/2022/08/Ton | Toner |
| 06 | NP/21/5/DGHM/2022/09/Ele | இலத்திரனியல் பொருட்கள் |

01. 2022 ஆம் ஆண்டிற்கு பொருட்களை வழங்குவதற்கு ஆர்வமுள்ள இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்கள். இவ் வைத்தியசாலை கணக்குக்கிளையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 1,000.00 இனை செலுத்தி கேள்வி ஆவணங்களை 19.01.2022 தொடக்கம் 01.02.2022 ம் திகதி வரை காலை 9.00மணி முதல் பி.ப.3.00 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.
02. அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு இடையூறின்றி பொருட்களை வழங்கியிருக்க வேண்டும்.
03. கேள்விப்பத்திரங்கள் 01.02.2022 திகதி மு.ப. 10.00 மணிக்குமுன் கிடைக்ககூடியவாறு **தலைவர், கேள்விச்சபை மாவட்ட பொது வைத்தியசாலை. முல்லைத்தீவு** எனும் முகவரிக்கு பதிவு தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக பெறுகை பெட்டியிலோ இடமுடியும். கேள்விகள் யாவும் 02.02.2022 மு.ப. 10.30 மணிக்கு விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.
04. ஏற்கனவே சேவையை வழங்கிவரும் ஒப்பந்தகாரர் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதியே தீர்மானம் எடுக்கப்படும்.
05. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கும் இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கும் பெறுகைகளின் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.
06. பெருமளவிலான பொருட்களின் விலைகளில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மீளவும் விலைக்கேள்விகள் கோரப்படும்.
07. மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொ.இல.021 206 1423

**வைத்திய கலாநிதி** M.Umashankar
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு.**

(cr.37347B) (2.6)

# கண்ணீர் அஞ்சலி

மன்ற உறுப்பினர்களான திரு.ப.சிவராசா
(பிரகாஸ் ரெக்ஸ் சாவகச்சேரி) திரு.ப. ஆனந்தராசா
(நிலா ரெக்ஸ் சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தாயார்

**திருமதி இராசம்மா பரமசாமி**

அவர்கள் 16.01.2022 ஆம் திகதி இறைபதமடைந்தார்.
அன்னாரின் மறைவுக்கு மன்றம் தனது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது

(Cr.37367) (2.6)

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

# வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்

## 13 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம்
எதிர்வரும் (29.01.2022) சனிக்கிழமை
பிற்பகல் 2.00 மணிக்கு
**வைத்திய கலாநிதி ந.சிவராஜா**
**நினைவு மண்டபத்தில்**
தலைவர்,
**வைத்திய கலாநிதி எஸ்.சிவபாதமூர்த்தி**
அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளதால்
அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது
கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வலுவிழந்தோர் சேவையில்

திருமதி சுஜீவா சிவதாஸ்
செயலாளர்.

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்
இல.47/2, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

(cs.42316) 2.6)

# விண்ணக வாழ்வின் 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ
23.01.1949

மனம் நெகிழ
18.01.2021



## அமரர்
## ஜேம்ஸ்சின்னராசா அல்பேட் யேசுதாசன்

**"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே" என்னிடம்**
**நம்பிக்கை கொள்வோர் இறப்பினும் வாழ்வார்"**
**(யோவான் 11:25)**

தந்தை என்ற சொல்லிற்கு இலக்கணமே
பிறர் கைநாடா பிறவிப் பெருங்கடலே
தன்னம்பிக்கையைத் தனித்துவமாக கொண்டீரே!
உம் மன உறுதியை என்றும் வெல்வது இறுதியே.

குடும்பத்தை உம் சிந்தனையாய் என்றும் கொண்டீரே!
அப்பா என்று அழைத்திட உங்கள்
அன்பு முகம் இங்கில்லையே!
உங்கள் நினைவுகளை மட்டும் எமக்கு
பரிசாகத் தந்தீரே!

என்றென்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்
மனைவி, மக்கள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேயர் மோசடி;விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு மேயரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பில், இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. மேயர் ரோஸி சேனாநாயக்கவுக்கு எதிராக கொழும்பு மாநகர சபை உறுப்பினர் மஹிந்த கஹந்தகம, செய்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொழும்பு மேயர் பொது நிதியைத் தவறாகப் பயன்படுத்துகின்றார் என்று அவ்வப்போது ஊடகங்களில் செய்திகள் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4இ)

## மரண அறிவித்தல்

### சண்முகம் இராமநாதன்

(முன்னாள் முகாமையாளர் - உரக்கூட்டுத்தாபனம், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்)



தோற்றம் 18.08.1936 மறைவு 17.01.2022

நல்லூர் செட்டித்தெருவினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் இராமநாதன் அவர்கள் நேற்று (17.01.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சபாநாதன், அருந்ததி, கமலாம்பிகை, யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகாலட்சுமி (கொழும்பு), யோகராணி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மைதிலியின் (கொழும்பு) சிறிய தந்தையும், உமா (U.S.A), ஜீவன் (U.S.A) ஆகியோரின் பெரிய தந்தையும், ஜெயலக்ஷ்மனின் (கொழும்பு) மாமனும், பூலோகராஜா ஜெயராஜ் (வேலை மேற்பார்வையாளர்-யாழ் மாநகர சபை) அவர்களின் சிறியதந்தையும், பத்மராணி-ஜெயராஜா (ஆசிரியர் - யாழ். நல்லூர் இந்து தமிழ் கலவன் பாடசாலை (மங்கையற்கரசி) அவர்களின் மாமனாரும், கரன், கபில், சண்முகப்பிரியன், ஹம்சப்பிரியன், அருந்ததி, ஜோசப், டானியல் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2022) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.80,**
**செட்டித்தெரு,**
**நல்லூர்.**

**தகவல்:**
**பூலோகராஜா ஜெயராஜா (ஜெகன்)**
**(யாழ் மாநகர சபை)**
**077 610 3572, 021 222 5626**

(CS 1152)1-6

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 03 . 1951



இறப்பு 16 . 01 . 2022

### திருமதி செல்வராணி யோகராஜா (ராணி)

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தை பிறப்பிடமாகவும், வில்லூண்டி பிள்ளையார் கோவிலடி கண்ணாபுரம், கொட்டடியை வதிவிடமாகவும் கொண்ட செல்வராணி யோகராஜா அவர்கள் கடந்த (16.01.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நாகலிங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், யோகராஜா அவர்களின் அன்பு மனைவியும், ராஜ்குமாரின் (பாபு) அன்பு தாயாரும், தவனேஸ்வரியின் அன்பு மாமியாரும், பவித்திரா, அலெக்ஸ், சாலினி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், காலஞ்சென்ற நாகரெத்தினம், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், மற்றும் செல்வராஜா, காலஞ்சென்ற இரத்தினசபாபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் பரமேஸ்வரி, சகுந்தலா, தேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2022) செவ்வாய்க்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வில்லூண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**51, வில்லூண்டி பிள்ளையார் கோவிலடி,**
**கண்ணாபுரம், கொட்டடி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 1154) 1/6

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 16.05.1940 இறப்பு 28.01.2021

கடந்த 28.01.2021 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

### அமரர் வடிவாம்பிகை காராளபிள்ளை

அவர்களின் முதலாவது ஆண்டுத் திவச கிரியைகள் இன்று (18.01.2022) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

**5 ஆம் வட்டாரம்,**
**நயினாதீவு.**

குடும்பத்தினர்

(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கிகளில் கொள்ளை; சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஜன. 18
சனச வங்கி, கிராமிய வங்கி மற்றும் சமுர்த்தி வங்கி ஆகியவற்றில் ஒரு கோடியே 73 லட்சத்துக்கும் அதிக பணம் மற்றும் 9 லட்சத்துக்கும் அதிக பெறுமதியுடைய தங்க நகைகளைக் கொள்ளையிட்ட சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸை பொலிஸாரினால் இரத்மலானை விமான நிலையத்துக்கு அருகில்வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் குறித்த நபர் பத்தேகம, பிடிகல, எல்பிட்டிய மற்றும் தெலிகட பிரிவுக பொலிஸ் பிரிவுகளில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளமை தெரிய வந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள் ளது.

சந்தேகநபருக்கு எதிராக காலி நீதிவான் நீதிமன்றத்தில் இதற்கு முன்னர் பிடியாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இவர் நேற்றுமுன்தினம் கல்கிஸை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம)

## எரிபொருள் விலை ஏறுமுகம்

கொழும்பு, ஜன. 18
உலகச் சந்தையில் எரிபொருள் விலை மேலும் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் பிரண்ட் ரக எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 86.6 அமெரிக்க டொலராகக் காணப்பட்டது. இதன்படி, கடந்த வாரத்தில் 5.4 சதவீதத்தால் எரிபொருள் விலை அதிகரித்துள்ளது.

அத்துடன், அமெரிக்க டபிள்யூ.டி.ஐ. எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 6.3 சதவீதத்தால் அதிகரித்து 83.82 அமெரிக்க டொலராகக் காணப்படுகின்றது. (த-இ)


## நியூபாரதி கல்விநிலையம்

கந்தரோடை, சுன்னாகம்

**தரம் 05 விசேட புலமைப்பரிசில் பரீட்சைக்கான இறுதிக் கருத்தரங்கு**

அனுமதி - இலவசம்

**18.01.2022 (செவ்வாய்க்கிழமை)**
**மாலை 05.00 - 7.00 மணி**

வளவாளர்கள்
திரு. M.P.விஜிந்தன் [ N.Dip.in.Teach (Merit), B.A, PGDE, Dip.in.Couns, M.Ed ]
திரு.S. சிவதாசன் [ B.A(Hons),Dip.in.Edu,N.Dip.in.Teach, M.Ed. I.S.A ]

18.01.2022 (செவ்வாய்க்கிழமை) மாலை 3.00 - 5.00 மணிவரை அனுமதிகளை முற்பதிவு செய்யவும்.

தொடர்புகளுக்கு : 0772037909


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 30 . 07 . 1949



மறைவு 19 . 12 . 2021

### அமரர் கிருஷ்ணபிள்ளை மகாலிங்கம்

கடந்த (19.12.2021) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர், அமரர் கிருஷ்ணபிள்ளை மகாலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (18.01.2022) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்தும், மற்றும் உடன்வந்து உதவிகள், ஆறுதல்கள் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

224, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
077 248 7989

நினைவுகளுடன்....
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 15.06.1932 உதிர்வு 19.12.2021

கடந்த 19.12.2021 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எங்கள் தெய்வம்

### அமரர் சின்னவன் பொன்னம்மா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (16.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (18.01.2022) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி.

குடும்பத்தினர்.


## சென்றல் பினான்ஸ் கம்பனி PLC

Central Finance

யாழ். நகரில் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களை வாங்குவதற்கும், விற்பனை செய்வதற்குமான அரிய சந்தர்ப்பம்

**கவர்ச்சிகரமான சலுகைகளுடனான குத்தகை வசதியூடாக பெற்றுக்கொள்வதற்கான அரிய வாய்ப்பு!**




**அனுமதி இலவசம்...**

இடம் : சென்றல் பினான்ஸ் கம்பனி PLC
364, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 18.01.2022 முதல் 22.01.2022 வரை
நேரம் : காலை 8.30 மணிமுதல் 5.00 மணிவரை

தொடர்பு: 077 210 6324
076 874 6604
077 958 8208

நிபந்தனைகளுக்கு உற்பட்டது


## மரண அறிவித்தல்



### ஸ்தபதி சுப்பிரமணியம் கந்ததாஸ்

அராலியை பிறப்பிடமாகவும் திருகோணமலை, உடுவில் தெற்கு பாலாவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்தபதி சுப்பிரமணியம் கந்ததாஸ் நேற்று (17.01.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ரஞ்சிதமலர், இரவீந்திரராசா மற்றும் புனிதமலர், புஸ்பமலர், வசந்தமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், துஷ்யந்தன், மனோரஞ்சன், சுபாஜினி, துளசிதரன் ஆகியோரின் மாமனாரும், புவனா துளசிதரன் (அவுஸ்ரேலியா), ஸ்ரீ சாஸ்வதனன், சர்வதனரூபன், கலாநிதி பவதாரிணி, செந்தூரன், கோகிலதர்சன், சுவிஹரன், சுவர்ணிகா, சாய்நாத், சாய்வரன் ஆகியோரின் அன்புப் பேரனும், சுஷ்விகா, சுஷ்விகன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.01.2022) செவ்வாய்க்கிழமை உடுவில் தெற்கு, பாலாவோடை மானிப்பாய் என்னும் முகவரியிலுள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு பி.ப 12.30 மணியளவில் தகனக் கிரியைக்காக எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 7123) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் விரைவில் முக்கியமான சந்திப்பு நடைபெறவுள்ளது எனச் செய்தி வெளியாகியிருந்தது. கோத்தாபய ராஜபக்ச, ஜனாதிபதியாகப் பதவியேற்று இரு வருடங்கள் கடந்துள்ள போதிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இதுவரை உத்தியோகபூர்வ சந்திப்பு எதையும் நடத்தவில்லை. கடந்த வருடம் ஜனாதிபதி செயலகத்தால் சந்திப்புக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும் அது இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இந்தநிலையில், இந்த மாத இறுதி வாரத்தில் கூட்டமைப்புடன் நேரடிப் பேச்சு ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் வினவியபோது;

"பேச்சுக்கான அழைப்பு எமக்கு இதுவரை வரவில்லை. எனினும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசுடன் நேரில் பேச்சு நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்நேரமும் தயார் நிலையில் உள்ளது.

ஆயினும் பேச்சு என்ற பெயரில் காலத்தை வீணடிக்க நாம் விரும்பவில்லை. இந்த விடயத்தை, ஜனாதிபதி எம்மை பேச்சுக்கு அழைக்கின்றபோது நேரில் தெரிவிப்போம். அர்த்தபுஷ்டியான பேச்சுக்கு நாம் திறந்த மனதுடன் தயாராக இருக்கின்றோம்.

நிரந்தர அரசியல் தீர்வுக்கு வழிசமைக்கும் வகையில் அந்தப் பேச்சு இடம்பெற வேண்டும். அதைவிடுத்து நாம் இனியும் ஏமாறத் தயாரில்லை. அனைத்துக் கருமங்களும் நல்லபடி அமைய வேண்டும் என்பதே எமது விருப்பம்" - என்றார். (த-22)

## வரலாறுகள்...

கிளிநொச்சி-விநாயகபுரம் கிராமத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற கல்வி பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் 9 'ஏ' சித்திகளைப் பெற்ற மற்றும் உயர்தர கல்விக்கு தகுதியுடைய மாணவர்களையும் , 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவி மற்றும் 40 வருடங்களாக குறித்த கிராமத்தில் பல சமூக சேவைகளை ஆற்றிவந்த முதியவர் சுந்தர்ராஜ் ஆகியோரை கௌரவிக்கும் முகமாக நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் சிறப்புரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இவர்களை இன்றைய நிகழ்வில் கௌரவிப்பது என்பதற்கு பின்னால் பலரது உழைப்பு உள்ளது. அவர்களுடைய கல்விக்கும் பலரது உழைப்பு வழிகோலியது. அதேபோன்று 40 வருடங்களுக்கு மேல் வளர்த்த முதியவரையும் நன்றியுணர்வோடு கௌரவப்படுத்தியுள்ளனர்.

வரலாறுகள் ஒரு போதும் பிழையாக வழி நடத்துவது இல்லை. தான் விரும்பிய திசையில் சரியாகத்தான் கொண்டு செல்லும்.

நாங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வடிவில் இந்த மண்ணிலேயே பிரசவிக்கப்பட்டவர்கள். விடுதலை உணர்வுடன் வாழ்பவர்கள். வரலாறுகள் வித்தியாசமானவை. பல கனவுகளோடு வாழ்ந்தவர்கள், இன்றும் ஆத்மாக்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் கனவுகள் என்றோ ஒருநாள் நனவாகும் - என்று மேலும் தெரிவித்தார். (த-இ)

## மாதகல்...

வில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தமிழக ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம், மாதகல் பகுதியை சேர்ந்த, மாதகல் மதன் என்ற புனைப்பெயருடைய 44 வயதான நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. வேதாரணியம், செம்போடை பகுதியில் நேற்றுமுன்தினம் அவர் கைதுசெய்யப்பட்டார்.

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புத்துறையினரின் தேடுதலில் இருந்தநிலையில், அவர் தமிழகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

2021 ஒக்ரோபர் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு கஞ்சா கடத்திய விவகாரத்தில், அவர் தமிழகத்தில் தேடப்பட்டு வந்தார். தமிழகப் பொலிஸாருக்கு போக்குகாட்டி இரண்டு மாதங்கள் தலைமறைவாக இருந்தநிலையிலேயே, அவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

அவர், 2012ஆம் ஆண்டு தமிழகத்தில் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைதாகி சுமார் ஒன்றரை வருடங்களாக சிறைத்தண்டனை அனுபவித்த பின்னர், 2013ஆம் ஆண்டு சிறையிலிருந்து விடுதலைசெய்யப்பட்டிருந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விமானம்மூலம் இலங்கைக்குத் திரும்பிய அவர், மாதகல் பகுதியிலிருந்து கடற்றொழில் செய்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுகின்றார் என்று கிடைத்த தகவலின் அடிப்படையில், அவர் பாதுகாப்புத்துறையினரின் கண்காணிப்பில் இருந்து வந்தார் என்றும் அறியமுடிகிறது.

இந்தநிலையில், கடல்மார்க்கமாக இந்தியாவுக்குள் நுழைந்த அவர், 2021 ஒக்ரோபர் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு கஞ்சா கடத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இது தொடர்பில் தமிழக ஊடகத் தரப்பில் வெளியிடப்பட்ட தகவலின்படி, தமிழகத்தின் பிறிதொரு இடத்தில் கஞ்சாவை பெற்று, கடல்மார்க்கமாக வேதாரணியம் பகுதிக்குவந்த இலங்கைக்கடத்தல் குழுவினரின் படகிலிருந்து அவர் இறங்கியதோடு, 3 மூடை கஞ்சாவையும் இறக்கினார். மிகுதி கஞ்சாவுடன் சென்ற ராஜன் என்றழைக்கப்படும் மயிலிட்டியைச் சேர்ந்த நபரும், சாகுல் என்றழைக்கப்படும் மட்டக்களப்பைச் சேர்ந்த நபரும் மயிலிட்டியில் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர் என்றும் இந்தியச் செய்திகள் கூறுகின்றன.

மதன் கொண்டு சென்றார் என்று கூறப்படும் கஞ்சா, கடந்த நவம்பர் 4ஆம் திகதி புஷ்பவனம் பகுதியில் கைப்பற்றப்பட்டது. எனினும், அவர் தலைமறைவாகிவிட்டார். அவரை பொலிஸார் தேடிவந்த நிலையில், தமிழகத்தின் பல பகுதிகளிலுள்ள இலங்கைத் தமிழ் நண்பர்களின் வீடுகள் மற்றும் கடத்தல் வலையமைப்பினரின் வீடுகளில் தங்கியிருந்த அவர், நேற்றுமுன்தினம் வேதாரணியம், செம்போடை கிராமத்துக்குச் சென்றபோது கைதுசெய்யப்பட்டார். அவர் தற்போது சைதாப்பேட்டை உப சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்று இந்தியச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

(த-இ)

## முல்லையில்...

120 மில்லிமீற்றர் எறிகணை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன. இவை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி அரசபுலனாய்வுப் பிரிவினரின் தகவலுக்கு அமைய சிறப்பு அதிரடிப்படையினர் வெடிபொருள்களை மீட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த-19)

## அரிசி விலை...

நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. நெல் அறுவடை இடம்பெறுவதனால் இவ்வாறு அரிசியின் விலை குறைவடையும் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் பி.கே.ரஞ்சித் தெரிவித்தார்.

கடந்த வாரங்களில் அரிசியின் விலையில் அதிகரிப்பு காணப்பட்டது. நெல் தட்டுப்பாடு மற்றும் நெல்லின் விலை அதிகரித்தமை என்பன காரணமாக இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டது.

தற்போது, வவுனியா மற்றும் வடமேல் மாகாணங்களில் நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது. எனவே, எதிர்வரும் வாரத்தில் அரிசியின் விலை குறைவடையும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(த-இ)

## கொரோனா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளாந்தம் பதிவாகும் கொரோனா உயிரிழப்புக்களில் பெரும்பாலானோர் மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெறாதவர்களாவர். எனவே, தடுப்பூசியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அனைவரும் அதனைப்பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒமிக்ரோன் டெல்டாவை விட வேகமாகப் பரவக்கூடியது என்ற நிலையில், கடந்தவாரம் தொற்றாளர் எண்ணிக்கையில் கணிசமானளவு அதிகரிப்பையும் இனங்காணக் கூடியதாகவுள்ளது.

அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இதுவரையில் 15 ஆயிரம் கொரோனா சிகிச்சைப்படுக்கைகளில் தொற்றாளர்கள் சிகிச்சை பெற்றுவருகின்றனர். அத்தோடு 52பேர் அதி தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் 5 சதவீதமானோர் ஒட்சிசன் தேவையுடையோராகவுள்ளனர்.

இதேநிலைமையைத் தொடர்ந்தும் பேணுவதற்கு தாமதமின்றி அனைவரும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார். (த-இ)

## தந்தையும்...

மாலை படகொன்றில் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில் கரைதிரும்பவில்லை. அவர்களை சக மீனவர்கள் தேடத் தொடங்கினர். அத்துடன் பொலிஸில் முறையிடப்பட்டு, உயிர்பாதுகாப்புப் பிரிவினராலும் தேடுதல் நடத்தப்பட்டது. இந்தநிலையில், நேற்று மாலை 5 மணியளவில் தந்தை மற்றும் மகனின் சடலங்கள் கரைக்கு கொண்டுவரப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் காயங்கேணி - மாங்கேணி பகுதியைச் சேர்ந்த தம்பிமுத்து திசநாயகம் (வயது - 56) அவரது மகன் திசநாயகம் அகிலவாசன் (வயது - 21) ஆகியோரே உயிரிழந்தனர்.

வாகரைப் பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டனர். (த-இ)

## விபத்தில்...

பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த மோட்டார்சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியைவிட்டு விலகியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதில், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த ஏ.அபிசாந் (வயது - 21) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த மோட்டார் சைக்கிளில் இரண்டு பேர் பயணித்துள்ளனர். விபத்தையடுத்து படுகாயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். எனினும், சிகிச்சை பயனளிக்காது அபிசாந் நேற்றுமுன்தினம் இரவு 8.30மணியளவில் உயிரிழந்துவிட்டார். மற்றையவர் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகின்றார். யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-இ)

## ஆனந்தசங்கரிக்கு...

கின்றார். அவருக்கு நேற்றுமுன்தினம் திடீரென உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. அதனையடுத்து, மருத்துவமனையில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றார். (த-இ)

# வருமானம் குறைந்தோருக்கு இலவச சூரிய மின்தொகுதி

## அமைச்சர் லொக்குகே தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 18

குறைந்த வருமானம் பெறுவோருக்கு இலவசமாக சூரிய மின் தொகுதிகளை வழங்குவதற்கு மின்சக்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அடுத்தவாரம் தொடக்கம் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளோம் என்று அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, ஒவ்வொரு கிராமஅலுவலர் பிரிவிலும் ஒவ்வொரு குடும்பத்தை தெரிவு செய்து, 14 ஆயிரம் வீடுகளுக்கு 5 வாட்ஸ் மற்றும் 10 வாட்ஸ் மின்வலு கொண்ட சூரிய மின் தொகுதிகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-இ)

# போரை முடித்த கதை கூறி வாய்ப்புக்கேட்ட ஜனாதிபதி

**கொழும்பு, ஜன.18**

**போரை முடிவுக்குக் கொண்டுவர நாம் தயாரானபோது எம்மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியிலும் போரை முடிவுக்குக் கொண்டுவந்தோம். அதைப் போன்று நாங்கள் வாக்குறுதியளித்த அனைத்தையும் எஞ்சிய மூன்று வருடங்களில் செய்துமுடிப்போம். என்னை நம்புங்கள்.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

மீரிகம முதல் குருநாகல் வரையான மத்திய அதிவேக நெடுஞ்சாலை திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

உலகளாவிய தொற்று ஏற்பட்டு, நாட்டை மூடி, தடைகள் ஏற்பட்டு முழு உலகுக்கும் இவ்வாறான நிலைமை ஏற்படும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. இப்போது நாடு திறக்கப்பட்டு படிப்படியாக பொருளாதாரம் முன்னேறி வருகின்றது.

இன்றுபோல் போரை முடிவுக்குக் கொண்டு வர முயன்றபோதும் எம்மீது குற்றச்சாட்டுக்கள் வந்தன. கடைசிநாள்வரை எமக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டது. ஆனால் முப்பது வருடப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தோம். என்மீது நம்பிக்கை வையுங்கள்.

பிரதமர் மஹிந்த மீது அன்று நீங்கள் வைத்திருந்த நம்பிக்கையை இன்றும் வைத்திருங்கள்.

எஞ்சிய மூன்று வருடங்களில் வாக்குறுதியளித்த அனைத்தையும் நிறைவேற்றுவோம் என்று உறுதியளிக்கின்றேன். எம்மால் அதைச் செய்ய முடியும்.

இந்த அபிவிருத்தியின் பங்காளிகளாக இருக்க வேண்டும் என்று ஊடகவியலாளர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

அதுதான் அவசியமானது. விமர்சித்து மக்களை தளரச் செய்ய வேண்டாம். முடியாது என்று கூறப்பட்ட போரை எப்படி முடிவுக்குக் கொண்டு வந்தோமோ, அதைப் போன்று இந்த அபிவிருத்தி வேலைத் திட்டத்தையும் முன்னெடுக்க முடியும்.

69 லட்சம் மக்கள் எனக்கு வாக்களித்த போது 52 லட்சம் பேர் எனக்கு எதிராகவும் வாக்களித்தனர். அந்த 52 லட்சம் பேரின் வேலை விமர்சிப்பது தான். எதிர்க்கட்சிகளின் செயற்பாடு விமர்சிப்பது. பொய்ப்பரப்புரைகளைக் கண்டு ஏமாறாதீர்கள். எதிர்க்கட்சியினர் விவசாயிகளைத் தூண்டிவிட்டு ஆர்ப்பாட்டங்களைச் செய்வித்தனர்.

எத்தனை தடைகள் வந்த போதும் மக்களுக்கு நிவாரணங்களை வழங்கினோம். நாம் எப்போதும் அரச ஊழியர்களின் சம்பளத்தை நிறுத்தவில்லை. பல நிறுவனங்களைச் சேர்ந்தவர்களைச் சந்தித்தேன். கடந்த வருடம் அவர்கள் அனைவரும் வரலாற்றில் இல்லாத அளவுக்கு அதிக இலாபம் ஈட்டியுள்ளனர்.

இரசாயன உரப்பயன்பாட்டை நிறுத்தச் சொன்னேன். அது கடினமான விடயம். ஆனால் அது மக்களுக்காகவே செய்யப்பட்டது. எங்களை நம்பும்படி விவசாயிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன். நான் உங்களுக்காக முன்னின்ற ஒரு ஜனாதிபதி. மீண்டும் ஒருமுறை பிரதமர் மஹிந்த ராஜபக்ச மீதும், என் மீதும் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (எ-இ)


கிளிநொச்சியில் இயங்கும் வர்த்தக நிலையத்துக்கு

**பணியாளர் உடன் தேவை**

- கணக்காளர்
- கணக்காய்வாளர் } கணினி அறிவுடையவர்களாக இருத்தல் வேண்டும்
- மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனை அனுபவம் உடையவர்கள்
- வெளிக்கள வேலை செய்யக்கூடியவர்கள்
- சீமெந்து, சீற் விற்பனை பிரதிநிதி
- காவலாளி
- சாரதிகள் (10 சில்லு வாகனம் செலுத்தக்கூடிய முன் அனுபவம் உடையவர்கள்)
  - சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
  - கிளிநொச்சியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது

**077 772 2305**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A-9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக் கிணற்றடி அருகாமையில் நிலப்பரப்பு 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 M தூரம். பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை.

தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

**தொடர்பு: 077 814 7389, 077 614 7333**

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

**af பிரெஞ்சு மொழி**



- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).

**021 222 8093** 17, Kandy Road, Jaffna

## தென்னந்தோட்டங்கள் விற்பனைக்குண்டு

எழுதுமட்டுவாழ் A - 9 வீதியிலிருந்து ¾ Km தூரத்தில் 12 ½ ஏக்கர், 16 ஏக்கர், 28 ஏக்கர் காணிகள் விற்பனைக்குண்டு.

**074 037 1960, 077 653 1980** (cs37368) (2.6)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழி A-32 மெயின் றோட்டில் 1ஆம் வீதியில் 42 பரப்புக்காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

நாவற்குழி சந்தியிலிருந்து 300 m தூரம் வீடு அமைப்பதற்கு நல்ல சூழல். 1 நிலப்பரப்பின் விலை 5 லட்சம்


**076 890 9259, 077 015 0353** (CS 1155 A) 3x4)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி ஐயனார் கோவில் வீதியில் 18 அடி பாதையுடன் 7 1/2 பரப்புக் காணி 1 1/2, பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (மேட்டுநிலம், நிலபரப்பு, நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 km தூரம்). ஒரு பரப்பின் விலை 3 லட்சம்.

தொடர்பு: **077 658 5999, 077 623 4204.** (CS 1155 B)1-6


## மரண அறிவித்தல்



### திரு. துரைஐயா ஞானசபேசன்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. துரைஐயா ஞானசபேசன் 16.01.2022 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி துரைஐயா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணியின் பாசமிகு கணவரும், யதுர்ஷன், ஹரிணி ஆகியோரின் அன்புமிகு தந்தையும், சங்கீதாவின் பாசமிகு மாமனாரும், கனகசபேசன், துரைஎங்கராசு, பூமலட்சுமி, காலஞ்சென்ற தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவசுப்பிரமணியம், விக்கினேஸ்வரன், அமிர்தலிங்கம், சண்முகராசா, மகாலட்சுமி, ஜெயாலட்சுமி, காலஞ்சென்ற வரதராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கிளுவக்கட்டை வீதி,**
**இணுவில் தெற்கு,**
**இணுவில்.**

(cs42315) (3.6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 826 3251**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.